# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர் : 13 | பிலவ ௵ தை ௴ | வருட சந்தா |
| இதழ்: 10 | ஜனவரி '62–பிப்ரவரி '62 | ரூ. 3-00 |




திருவாரூரில் சுந்தரரும், சேரமான் பெருமாளும் சந்தித்தல்

(சித்திர விளக்கம் பக்கம் 436)

## உள்பொருள்


பக்கம்

1. நாம ஸ்மரணமே பேரின்ப வீடு (திருப்புகழ்மணி) ... 433
2. சேரமான் தோழமை (கி. வா. ஜ.) ... 436
3. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... 439
4. திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 442
5. ஸ்ரீமஹாபாரதம் (பாரத்வாஜீ அதம்பார் S. ராமஸ்வாமி) ... 453
6. காலதர்மமும் காலதர்மனும் (ஆ. கி. ரங்கராஜன்) ... 456
7. நாளும் கோளும் (ரஸபதி) ... 461
8. காளைக் குமரேசன் (கி. வா. ஜகந்நாதன்) ... 469
9. மணம் (C. M. பரமானந்தம்) ... 472
10. இன்பமே எந்நாளும் துன்பமில்லை (அன்பன்) ... 475
11. THE DECEMBER FEAST OF BHAJAN (*Thiruppugal Mani*) ... 478


---


### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேபா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

---

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

| மலர் 13 | பிலவஞ்ஞ தைமீ<br>ஜனவரி—பிப்ரவரி 1962 | இதழ் 10 |
|---|---|---|


## நாம ஸ்மரணமே பேரின்ப வீடு

(திருப்புகழ் மணி)

### ஒட்டுவது அன்பு – கரைவது காதல்.

ஈசனிடம் மனம் கரைந்தால், அந்தக் காதல் அடியார்களை நன்றிக்கு உய்ப்பதுமன்றி, நாதன் நாம ஆனந்த ஸாகரத்தில் நிறுத்திவிடும்.

நான் என்ற ஆணவத்தை மறந்தவர்தான் நாதனாகிய முருகனை யடைய முடியும். தன்னை மறந்த கோபியர் எங்கும் கிருஷ்ணனைக் கண்டார்கள். குஹமயம் ஜெகத்தாய்க் கண்டார் அருணகிரியார். எந்த நாம ரூபத்தை நினைக்கிறோமோ அந்த நாம ரூபமான பொருளே நம் உள்ளிருந்து வெளியில் வந்து காக்கும். தெய்வம் நம் உள்ளத்திலும் இருக்கிறது. மனமுருகி அதை யழைக்கும் பொழுது ரூபத்துடன் வெளியில் வருகிறது. முருகனைக் கூடவே வைத்துக்

தன் வாழ்விற்(கு) அன்றிப் பிறர்வாழத் தான் வருந்தல்,
நன்மையென்றே, மேலோர் நாளும்நவில் கின்றாரே.

கொண்டால் அவனுடைய நிழல் எப்பொழுதும் நம்மைக் காக்கும். உலகமெல்லாம் அவனுடைய நிழலில் தான் தங்கியிருக்கிறது. ஆண்டவன் எங்குமிருப்பவனுயினும், அவன பெயரைச் சொன்னமாத்திரத்தில், நிழல்போல் நம்மைத் தொடர்ந்து, நாம் எங்கு சென்ருலும அங்கு தோன்ருத் துணையாயிருந்து நம்மைக காக்கிருன்.

தேவாரம் திருப்புகழ் முதலிய பாடல்களை இசையுடன் பாடினல், மனேலயம் உண்டாகும். நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால், போக்கு வரவற்ற ஒரு பொருள் நம்முள்ளத்தில் வந்து தாக்கி ஆனந்தத்தைக் கொடுககும். எந்தக் குலத்தில் பிறந்தாலென்ன? பிறந்த குலத்தை மறந்து முருகனை நினைப்பவன் உயர்ந்த குலத்தில பிறந்தவனுய் விடுகிருன். அட்டை பிடித்துப் பிடித்துப் பார்த்து முடிவில் ஒட்டிக் கொள்வது போல, மனத்தால் ஆண்டவனை விடாமல் நினைத்துக் கொண்டிருந்தால், முடிவில் அவனுடன் ஒட்டிக் கொள்ளும். அதுவே ஒட்டிட்ட பண்பு. ஆண்டவனிடம் நாம் அட்டைகளாய் விடவேண்டும். உலகத்திலுள்ள ஜீவராசிகளை முருகனுகப் பார்த்து அவற்றுடன் அன்பினல் ஒட்டிக்கொளள வேண்டும். சூரபதுமன் உலகத்தில் வேற்றுமையைக் கண்டு வேற்றுமையை வளர்த்தான். அனபாகிய முருகனை எங்கும் கண்டு ஒற்றுமையை வளர்த்தனர் தேவர்கள். முருகனுடைய வேலும் இராமபாணமும் அன்பின் சுவரூபமே. முருகன் ஒரு வேலையும் இராமன் ஒரு பாணத்தையும் விட்டு உலகத்தை ஒற்றுமைப்படுத்தினர். அன்பினல் உலகத்துடன் ஒட்ட வேண்டும். இதுவே இறைவனுடைய பண்பு. ஒற்றுமையில் வேற்

---

பசுவைக் கொன்றே செருப்புத் தானஞ்செய் பொல்லார்போல், கிசமில்லான் செய்தருமம் நின்றுபுகழ் செய்யாதே.

றுமை லயப்பட்டு விடும். ஜீவனும் பரமனும் ஒட்டி யதை அறிவதெப்படி? இரண்டாயிருக்கும் தாளத்தைத் தட்டினுல் ஓசை யுண்டாகிறதல்லவா? அது போல், ஆண்டவனுடன் ஒட்டியதற் கடையாளம் ஆனந்த உணர்ச்சி யேற்படுவதுதான்.

"திராப்பிணி தீர ஜீவாத்தும ஞான ஊராட்சிய தான ஓர் வாக்கருள்வாயே" என்று முருகனைக் கேட்டார் அருணகிரியார். ஜீவிதமுடையது ஆத்தும ஞானந்தான். உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் ஞானசுவரூபமே. முருகாவென்று பாடுவது சப்த சுவரூப ஞானம். அந்நாமத்தைச சொல்லி வந்தால், உடலில் வாழும் தியாகிய முருகஜோதி ஜாஜ்வல்லிய மாய்ப் பிரகாசிக்கும். அதை அணையவிடாமல் கினை வால் வளர்க்க வேண்டும். உடம்பே ஞானபுரம். "ஞான ஊராட்சியை ஆள முருகாவெனும் ஒரு ஞானவாக்கைக் கொடு" என்ருர் அருணகிரியார். தமிழ்மொழி முருகனை நாடச் செய்கிறது. "தமிழ்" என்பது ஓர் மொழியை மட்டும் குறிப்பதல்ல. தமிழ் என்பது ஓங்காரம். "கொன்றைச் சடையற் கொன் றைத் தெரியக கொஞ்சித் தமிழைப் பகர்வோனே" என்ருர் அருணகிரியார். ஆண்டவன் துதி எம் மொழியி லிருந்தாலும் அதற்குப் பெயர் தமிழ். உடம் பாகிய ஞானபுரத்தில் முருகனுடைய நாமத்தைச் சொல்லிச் சொல்லி அவனுடைய ஆட்சியை ஸ்தா பிக்க வேண்டும்.

---

வாயடக்கி நெஞ்சடககி வாழ்தவத்தைச் செய்யாதார்
சாயவுடை பூண்டு சதிராடல் செய்பவரே.

சுந்தரர் வரலாறு :

# சேரமான் தோழமை

(கி. வா. ஜ.)

காவிரியின் வடகரையில் பெருமங்கலம் என்ற ஊரில் சோழ மன்னர்களின் சேனைத் தலைவராவார் குடியாகிய ஏயர் குடியில் கலிக்காமர் என்னும் அன்பர் ஒருவர் பிறந்தார். அவர் சிவனடியார் பால் மிக்க அனபுடையவராகி வாழ்ந்தார். அவருக்கு, சுந்தரர் இறைவனைப் பரவையார் பால் தூதுவிட்டார் எனற செயதி காதில் விழுந்தது. அதுகேட்டு, "எம்பெருமானை இவர் ஏவியது நன்றாயிருக்கிறது" என்று கோபமும் அதிசயமும் கொண்டார். "எம்பெருமான தான் அடியவருக்கு எளியராயினும் இந்த மனிதன் ஒரு பெண் பிள்ளையிடம் இரவில் தூதனுப்புவதாவது! அந்த மனிதரைக் கண்டால' என்ன செய்வேனோ?" என்று கோபம் மிக்க உள்ளத்தினராகி இருந்தார்.

இந்தச செய்தியை அறிந்த சுந்தரர் தாம் பிழை செய்ததை ஒபபுக் கொண்டு, "இதற்குத் தேவரீரே ஏதேனும் பரிகாரம் செயதருள வேணடும்" என்று இறைவனை வேண்டினார்.

இறைவன அவ்விருவரையும் நட்பாக்க வேண்டும் என்று திருவுள்ளங் கொண்டு ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குச் சூலைநோயை உண்டாக்கினார். அதனால் அவர் மிக வருந்திய போது இறைவன அவர் பால் சென்று, "சுந்தரன் வந்து இதனைத தீர்ப்பான்" எனறு அருளினான், "எம்பெருமானை ஏவல் கொண்ட அவர் வந்து தீர்ப்பதைவிட நான் இநத

மறுமைக்குத் துணையா, மகிழ்ந்தறத்தை செய்யாச
சிறுமையர்கள் மூத்தால், சிறப்பிக்கா திவ்வுலகே.

நோயால் வருந்துவதே நன்று" என்று மறுத்தார் அவர். இறைவன் மறைந்தருளிச் சுந்தரரிடம் சென்று, "நீ போய்க் கலிக்காமனுடைய சூலை நோயைத் தீர்த்துவா" என்று பணித்தான்.

சுநதரர் கலிககாம நாயனுரிடம் செல்லப புறப்படடு தாம் வருவதை முன கூட்டியே சொல்லி யனுபபினுர். அதுகேட்ட ஏயர்கோன், 'இவர் கையால் நோய் தீர்வதைவிட நான் சாவதே நனறு' என்று எண்ணித தம் உடைவாளால் குத்திக் கொண்டு உயிர் நீத்தார். அவருடைய மனைவி சுந்தரர் வருவதை அறிந்து, ஏயர்கோன் உடம்பை அலங்கரிததுப் படுக்கையில் விடச்செய்து, "யாரும் அழாதீர்கள. நம்பியாரூரரை வேண்டிய உபசாரங்கள் செய்து எதிர்கொள்ளுஙகள்" எனருள். அப்படியே அவர்கள எதிர்கொள்ள, "ஏயர்கோன உடல் நலம் எப்படி இருக்கிறது?" என்று சுந்தரர் கேட்டார். "அவர் படுக்கையில் படுத்துள்ளார்; நோய் இல்லை" என்ருர்கள். அது கேட்ட சுந்தரர், "நான் அவரைப் பார்க்க வேண்டும்" என்று சொல்ல அவர்கள் அழைத்துச் சென்ருர்கள்.

சுந்தரர் அவர் நிலையைக் கண்டு, "நானும் என் உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்று குற்றுடை வாளை எடுத்தார். இறைவன திருவருளால் பிணமாகக் கிடந்த ஏயர் கோன் உயிர்பெற்று எழுநது, சுநதரர் செய்கையைத தடுத்து உடைவாளை வாஙகிககொண்டார். சுந்தரர் உடனே ஏயர் கோனைப் பணிய, அவரும் சுந்தரரைப் பணிந்தார். இருவரும் எம்பெருமான் பெருஙகருணைச் சிறபபை எண்ணிப போற்றினர். அனறு முதல் நெருங்கிய நண்பர்களாயினா.

---

மனசாட்சிக்(கு) அஞ்சும் மகப்பேறு நல்ல;
இனம்பெருக்கப் பெற்ருர், இழிவெய்தி மாய்வாரே.

சேரநாட்டில் திருவஞ்சைக் களத்தில் இருந்து அரசாண்டு வந்தார் சேரமான் பெருமாள் நாயனூர். அவர் ஒவ்வொரு நாளும் சிவபெருமானைப் பூசை செய்து முடித்தவுடன் இறைவனுடைய பாதச சிலம்பொலி கேட்கும். அதனுல் மன நிறைவு பெறுவார். ஒருநாள் பூசை முடிந்தும் சிலம்பொலி கேட்கவில்லை. அதனுல் வருந்திய பொழுது சிறிது நேரம் கழித்து அவ்வொலி கேட்டது. அதோடு, "தில்லையில் வன்றெண்டன் நம்மைத் தரிசிக்க வந்தான். அதனுல் தாமதமாயிற்று" என்று இறைவன் அருளினுன். அதுகேட்ட சேரமான், "அத்தகைய அடியாரைத் தரிசித்து இன்புற வேண்டும்" என்ற ஆர்வம் உடையவராளுர்.

தம் நாட்டினினறும் நீங்கித் திருத்தில்லை சென்று நடராசப் பெருமானைத் தரிசித்துக் கொண்டு, சுந்தரர் திருவாரூரில் எழுந்தருளி யிருப்பதை அறிந்து அங்கே சென்றுர். சுநதரர் அவர் வரவை யறிந்து வரவேற்கச சேரமானும் சுந்தரரும் நண்பர்களாயினர். தம்பிரான் தோழராகிய சுந்தரர் இப்போது சேரமான் தோழரும் ஆனுர்.

அப்பால் இருவரும் திருவாரூர் பூங்கோயில் சென்று இறைவனை வழிபட்டார்கள்.

---

தன்னறிவும் கற்ற தனியறிவும் கொண்டுலக
நன்னடையைக் கல்லார், நடைப்பிணமே ஆவாரே.

# குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

## 8. சுபநிதி பதயே நமோநம:

சுபநிதி – பேரின்ப மங்கள முத்திச் செல்வத்தின ;
பதயே – தலைவனுக்கு ; நமோநம : போற்றி போற்றி.

**துன்பச் செல்வத்தின் தன்மை** :—நிதி என்றால் செல்வம் என்று பொருள். செல்வம் என்பது மக்கள், வீடு, மாடு, பொன் முதலியவை என்பர். ஆனால் இச்செல்வம் நிலையானதாகாது. ஏனெனில் நாம் உலகத்தில் வாழும் வரையில்தான் பயன் படும். "பொருளி லார்க்கு இவ்வுலக மில்லை." அதாவது இம்மைக்கே உரியது ; மறுமைக்குப் பயன்படாதது. அடிக் கடி மாறும் தன்மையை யுடையது. 'செல்வம்' என்ற சொல்லே 'போவோம்' என்ற பொருளைத் தருவதாகும். இவ்வித செல்வம் அற்பர்களிடத்திலும் சாதாரணமாய் உள்ளமை காணலாம்.

"பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள" (திருக்குறள்)

இவ்வித பொருள் செல்வத்தை ஈட்டுவதும், காப்பதும், அழிப்பதும், பின் இழபபதும் துனபத்தையே தரும்.

"இன்னல் தரும்பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே—அன்னது
அழித்தலும் துன்பமே அந்தோ பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம்."

எனவே இச செல்வத்தைத் துன்பச் செல்வம் என்னலாம். மேலும் இச் செல்வம் வந்ததும் பலவித தீய குணங்களும் உண்டாகும்.

---

அறிவும் உணர்வும் மனையறத்தின் ஆக்கம் ;
அறியார் அதையென்னில், அழியின்பாம் அவ்வளவே

" செல்வம்வந் துற்றகாலை தெய்வமும் சிறிது பேணார் "

" சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுளோர் மூகராவர்
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடராவர்
குறிபெருங் கண்ணுளாரும் குருடராய் முடிவரன்றே."

என்பதனை நோக்குக.

இநதச் செல்வத்தால வரும் இன்பம் மிகச் சிறியது. துன்பமோ மிகப பெரியது. ஆதலின் இதனைத் துன்பச் செல்வம் என்போம்.

## இன்பச் செல்வம் எது ?

அமங்கலத் துன்பச் செல்வம் என்று ஒன்றிருந்தால் மங்கல இன்பச் செல்வமும் இருக்கவேண்டுமே! ஆம். இன்பச் செல்வம் என்பதும் உண்டு. அதுவே முத்தி யினபமான பேரின்பந்தரும் செல்வமாகும். வறுமையால் வாடினார் குசேலர். அவருடைய 27 பிள்ளைகளுக்கும் ஒருவேளை கஞ்சிகூட வயிறார அளிக்க வகையில்லையே என்று வாடினார். அவருடைய மனைவியான சுசீலை, பற்றற்ற பரம யோகியாகிய குசேலரிடம் இதை எவ்வாறு தெரிவிப்பது? இவ் வறுமை நீங்க வழி யாது? என்றெல்லாம் பலகாலம் சிந்தித்தாள். அவளுககு ஒரு யோசனை தோன்றியது. துவாரகை மன்னனாகிய கண்ணபிரான் குசேலரது சிறந்த நண்பன். குசேலரும் கண்ணனும் சாந்தீப முனிவரிடம் ஒருசாலை மாணவராகக் கல்வி பயின்றவர்கள். ஆகையால், செல்வனாய் விளங்கும் கண்ணனிடம் சென்று சிறிது பொருள் வாங்கி வந்தால், தமது செல்வக் குழந்தைகளின பசிப்பிணியை மாற்றலாம் என எண்ணினாள். ஒருநாள் குசேலரை வணங்கித் தன்

---

மதிமககட் பேறு மனையறத்தில் வாய்க்க,
மதிநுதலார் கூட்டம், மதிப்பார்கள் ஞானிகளே

எண்ணத்தை வெளியிட்டாள். குசேலர் அதனைக் கேட்டு, கண்மணி ! பால் கடலிலேயே வாழ்கிற மீன் ஒன்று அங்குள்ள பாலைக் குடிகக விரும்பாமல் வேறு உப்புக் கடலிலுள்ள உப்பு நீரைக் குடிக்க விழைந்தது போல, கண்ணனை அடைந்து நான்கு கதிகளையும் கடக்கும் இன்பச செல்வத்தை நண்ண எண்ணுமல், துன்பச் செலவத்தையா விரும்புவேன் யான் ?

" பாற்கடல் அடுத்தமீனஅப் பால்விரும் பாமல் வேறு
ஏற்குமா விரும்பினுற் போல் எம்பிரான் திருமுன் சார்ந்து
நாற்கதி கடக்கும் இன்பச் செல்வத்தை நண்ணி டாமல்
சேல்கருங் கண்ணுய் ! துன்பச் செல்வமோ நண்ணுவேன்
யான் ?''

எனக்கூறி மறுத்தனர் என்பது குசேலோபாக்கியானம். இன்பச் செல்வம் முத்திச் செல்வமேயாம். அதுவே சுபநிதி யாகும். அதனை அடியவருக்கு வழங்கும் அண்ணல் குமரக் கடவுளே யாதலின் சுபநிதி பதயே நமோநம என்ருர.

## இன்னெரு கருத்து :

சுபம் என்பது சிவம், மேன்மை எனற பொருள்களும் உடையது. ஆதலின் சிவநிதி என்ற செம்மை நலத்தின தலைவன் குகவேள் என்றும், எல்லா மங்கலத்திற்கும் மேன் மைக்கும் இருக்கையாக இருப்பவன் என்றும் கொள்ளலாம்.

நீர் நிறைந்த கடலுக்கு ஜலநிதி என்று பெயர். அது போல மாருத மங்கலம் (சுபம்) நிறைந்த குகப்பரமன் சுபநிதி எனப்பட்டான. ஆதலின் மங்கள (இன்ப) தாயகமான மாபெருந் தலைவனுக்கே வணக்கம் கூறியதாகக் கொள்ளலாம்,

---

இயல்வதனை என்றும் ஈயாரை, ஞால
இயற்கை பழிக்கும் ; மனச்சான் றிடிக்குமரோ

(குகஸ்ரீ)

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண !
முத்திக்கொரு வித்துக் குருபர ! எனவோதும்
முக்கண் பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்துடன் ரட்சித் தருள்வதும் ஒருநாளே !
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு கழுதாடத்,
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனஓதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே!

---

பிறந்தான உணர்வின்றி வாழ்கின்ற பேதை,
இறந்தானுக்(கு) ஒப்பாய், இருந்தவனே ஆவானே.

(பதவுரை) (முத்தைத்தரு .... முற்பட்டது கற்பித்து.)

முத்தைத் தரு - வீடுபேறு விளைவிக்கின்ற ;

பத்தி(தரு) - அன்பை அருள்கின்ற ;

திரு(தரு) - (பரம) அருளைப் பாலிப்பதான ;

நகை அத்திக்கு இறை - புன்னகை செய் (மாபெரும் தேவ) யானை மணவாளா !;

சத்திச் சரவண - (ஞான) சத்திவேல் ஏந்திய சரவணனே;

முத்திக்கு ஒரு வித்து - முத்திப் பேற்றிற்கு ஒப்பற்ற மூலம் ஆனவனே !

குருபரா என ஓதும் முக்கண் பரமற்கு - மேலிடம் காட்டும் (அற்புத) ஞான ஆசார்ய! என்று, (வலம் வந்து) வழுத்திய (கனல் பரிதி மதிகளாம்) மூன்று கண்களையுடைய முதல்வற்கு

சுருதியின் முற்பட்டது கற்பித்து - (உயர்) மறைக்கு முன் விளங்கும் ஓம் பொருளை உபதேசித்து ,

(இருவரும்... .....அடிபேண.)

இருவரும் - (இந்திரன் நான்முகன் எனும்) இருவரும் ;

முப்பத்து மூவர்க்கத்து அமரரும் அடிபேண - முப்பத்து மூன்று கோடியரான வானவரும், (அரக்கர் தொல்லை பொறுது வணங்கித் தம்) திருவடிகளை வழிபட ;

(பத்துத் தலை ... ..மெச்சத் தகுபொருள்)

பத்துத் தலை தத்தக் கணை தொடு - (இராமாவதாரத்தில், இராவணனுடைய) பத்துத் தலைகளும் துள்ளிவிழப் பாணம் ஏவி

ஒற்றைக் கிரி மத்தைப் பொருது - (கூர்மாவதாரத்தில்) ஒப்பற்ற (மந்தர) மலையாகிய (கம்பீரமான) மத்தால (பாற் கடலைக்) கடைந்து,

ஒரு பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாக - (கிருஷ்ணாவதாரத்தில புனிதமான) ஒரு பகல்பொழுதை, வட்டமான சக்கரத்தால் இரவுப்பொழுது (ஆகச் செய்து) ;

---

அஃதில்லை இஃதில்லை என்றே குறைகூறி,
எஃதெஃதோ எண்ணுநர், என்றும் வறுமையரே.

பத்தர்க்கு இரதத்தைக் கடவிய - பக்தனாகிய பார்த்தனுக்குச சாரதியாகித் தேரைச் செலுத்திய ;

பச்சைப்புயல் மெச்சத் தருபொருள் - நீலமேகமான திருமால் பாராட்டத் தகுந்த (பரம்)பொருளே !;

(தித்தித்தெய........பெருமாளே !)

தித்தித்தெய ஒத்தப் பரிபுர நிர்த்தப் பதம் வைத்து - தித்தித்தெய (எனும் தாள) ஒத்திற்குத் தக்கபடி, திருவடிச் சிலம்பொலிக்க, (குடைக்கூத்தும் துடிக்கூத்தும்) ஆடும் வேகத்தில் அடியிட்டு,

பயிரவி திக் கொட்க கடிக்க -பயிரவிகள், திசைகள் குழப்பம் அடையும்படி (கோரமாகச் சுழன்று) கூத்தாட

கழுகொடு கழுது ஆட - கழுகுகளும் பேய்களும் கலந்து குதிக்க ;

திக்குப பரி அட்டப பயிரவர் - (பரிவொடு) எண் திசைகளைப் பாதுகாக்கும் எட்டுப் பயிரவர்கள் ;

தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு - (என்று ஒலி எழ ஆடும்),

சித்ர பவுரிக்குத் திரிகடக என ஓத - அழகிய பவுரிக் கூத்தில, திரிகடக எனறு, (ஒவ்வொரு சுழற்சியிலும், ஓயாமல் வாயால்) ஓத ,

கொத்துப் பறை கொட்ட-பறைகள் பல முழக்கு எழுப்ப

களமிசை - (விளைந்த கடுமையான) போர்க் களத்தில் ;

குக்குக் குகுகுகு குக்குக் குகுகுகு—, குத்திப் புதை- புக்குப் பிடி என—,

முது கூகை கொட்புற்று எழ - கிழக்கோட்டான்கள் படபடத்து(ச் சுழனறு) மேல் பறக்க ,

நட்பற்று அவுணரை வெட்டிப் பலியிட்டு - இரக்கம் இனறி, அவுணர்களை வெட்டிக் களவேள்வி விளைவித்து ;

---

இறந்த பினனும் புகழ் இவவுலகில் நிற்கச்
*சிறந்த கருமங்கள் செய்பவர்கள் மேதையரே.*

குலகிரி குத்துப்பட - (கோர அவுண) இனமான கிரவுஞ்சம், (மாயாமலை இரண்டும்) குத்துப்பட்டு அழிய;

ஒத்துப் பொர வல பெருமாளே - உடன்பட்டுப் போர் செய்யவல்ல பெருமையில் உயர்ந்த பெரியோனே !;

பட்சத்தொடு ரட்சித்து அருளுவது ஒருநாளே - அன்பொடு (அடியேனைக்) காத்து அருளும், ஒப்பற்ற நாள் என்று நேருமோ, (எ - று).

விரிவுரை.

குரு வடிவாய் நின்ற குமரா! வழிபடும் முறையை வகைபெறக் காட்ட, சிவனார் உம்மை வலம் வந்தார். இந்தக் கிரியையைக் கண்ட கிரியா சக்தி, புனித ஒளி எழப புன்னகை செய்தனர். அரிய அவ்வொளி, தொந்த பந்தங்களைத் தொலைப்பது; அன்பு வாழ்வை அருளவது; பயனை அருளைப பாலிப்பது. அருமையான இந்த உதவியை அறிந்து,

'முத்தைத் தரு பத்தித் திருநகை அத்தி' என்று முன்னுரை கூறினார்.

முக்தம், முக்தி இரண்டும், விடுதலை எனும் பொருளன. அம் முத்திக்கு வழி அன்பு: அந்த அன்பை அளிப்பது பேரருள். நலமெலாம் விளைவிக்கும் அந் நகைநலத்தை, இப்படிப் பாடி மகிழ்ந்தார் பரமேசர்.

திரு தரும் நகை, பத்தி தரும் நகை, முத்தி தரும் நகை என்று, கொண்டு கூட்டிப் பொருள்கொளப் பெற்றது.

• தரும் எனபது, போல எனும் உவம உருபு; பத்தி-வரிசை, திரு - அழகு; நகை - பல் எனக் கொண்டு, முத்துக்களை வரிசைபபடக் கோர்த்து வைத்தது போன்ற பற்களை யுடைய தேவகுஞ்சரி மணவா! எனறு, பொருள் கொள்ளல் பொதுநிலை.

---

கைக்கும் பொருள்கருதி, கையேந்தி நிற்கின்றார்
துக்கவாழ்(வு) என்னாளும் தோய்வர் , இது நிச்சயமே

இது சிவஞர் திருவாசகம்; ஆதலின், அருளும் அன்பும் வீடும் தரும் கலைபுரி தேவி மணாளா என்று பொருள் கொள்ளல் சிறப்பு கிஃல.

குருவான உம் திருவுருவில், கரந்து கலந்து இருக்கின்றார் யோக தேவியார்.

'' தேவியோ டிருந்தே யோகு செய்வானே '' என்பது தமிழ் மறை.

உமது இடத்தில் இருப்பது கிரியா சக்தி; வலத்தில் இருப்பது இச்சா சக்தி : கரத்தில் இருபபது ஞானசக்தி.

ச - மங்களம்; ர - ஈகை; வ - அறம்; ந - மறம்; இந்த அனுபவ ரூபம், ' சக்திச சரவணன் எனப்பெறுகின்றது.

முத்திதரும் முதலாளி யாதலின், உம்மை ' முத்திக்கு ஒரு வித்து ' என று பாடுவதுதான் முறை.

பரம் - மேலிடம்; கு - அஞ்ஞானம்; ரு - மெய்யொளி; இருள் தவிர்த்து, மேலிடம் காட்டி, அருளொளியில் அளவளாவச செய்யும் குறிபபான ரூபம், குருமூர்த்தம். அந்த அருமையை உலகம் அறிய, ' குருபரா ' என்று சிறக்க விளித்தார் சிவபிரான.

வரனமுறையாக ஓதி வலம் வந்தபின், பின்தாழ் சடை முன்தாழ் சடையாக, முன் வணங்கி நின்றார் முக்கணணர்.

வேத முதலான நாத உயிர்ப்பை, ஓதாது ஓதுவதன் மூலம், கருணையொடு அவர்க்குக் கற்பித்தீர் !

' சுருதியின் முற்பட்டது கற்பித்த ' அக் கலவியே கல்வி எனப் பெறும்.

'' தனகுத் தானே மகனுகிய தத்துவன
நனகுத் தானே ஒரு தாவரும் குருவுமாய்
தனக்குத் தானே வுயர் தத்துவம் கேட்டலும்
தனக்குத் தான் நிகரினுன் தழங்கிநின்று ஆடினன் ''

---

பிச்சை யெடுக்கும் விதியில்லாப் பேதைகள்தம்
இச்சை நிறைவேற, அன்னர்க(கு) ஈதல் மிகநலமே.

என்று, இவ்வரலாற்றைத் தகவோடு கூறுகிறது தண்ணிகைப் புராணம்.

ஐந்தெழுத்துப் பரம்பரை, சிவம் என்று அறிந்திருந்த உலகம், இந்த உபதேசத்தின் பின், ஓரெழுத்துப் பரம்பரையையும் உணர்ந்து கொண்டது. இது ஒரு கிரேத யுகச் செய்தி.

ஒரு சமயம், அரக்கர் கொடுமை உலகில் அதிகரித்தது. அதனால் அமரர் அலறினர். நாவறண்டு உலகம நடுங்கியது. இந்திரனும் பிரமனும் வைகுந்தம் சென்றனர். முகுந்தா! அபயம் என்று முறையிட்டனர். உடனே திருமால் அயோத்தியில் இராமராக அவதரித்தார். அரக்கர் பூண்டைக் கருவறுத்தார். இராவணனது தலைகள் பத்தையும் அறுத்துத தள்ளினார். உலகம் அதன் பின் உய்தி யடைந்தது.

'பத்துத் தலை தந்தக் கணை தொட்ட' இது, ஒரு திரேதாயுக் கால வரலாறு.

மற்றொரு சமயம், அசுரர் புலம் அதிகரிக்க, இமையவர் வாழ்வு இடிந்து சரிந்தது. கலன் உலகர் கதறினர். அது கண்ட அசசுதர், மந்தர மலையை மத்தாக்கினர். இனிய பாற்கடலில இட்டார். அம்மலை ஆழ்கடலில அழுந்திப போகாதபடி, கூர்மாவதாரம் கொணடார். முன்னேறி வந்தார். மலையை முதுகால் தாங்கினர். கடைநத பின, தெளிந்த அமுதம் திரண்டது. வானவர்க்கு வழங்கி, வாழ்நாளும் வல்லமையும் பெருகுமாறு, அவர்கட்கு வாழ்வை அளித்தார். 'ஒற்றைக் கிரி மத்தைப் பொருத்' இது, ஒரு யுகத்தின் இறுதிச் செய்தி.

• துவாபர யுககாலம் தோன்றியது. அதன இறுதியில், தர்மம், அதர்மத்தைத் தாக்கியது. பாண்டவர் பக்கம் தருமம். கௌரவர் பக்கம் அதர்மம். அது காரணமாக, பாரதத்தில் நிகழ்ந்தது பயஙகர யுத்தம்.

---

அறிவுடையார், என்றும் அருள்கினைந்து வாழ்வார்;
செறிஇன்பம், அன்னாரைத் தேடிவந்து சேர்ந்திடுமே.

பதின்மூன்றும் நாள் சண்டையில், சூழ்ச்சி பலமாகச் சுழித்தது. வீர அபிமன்யுவை, சயத்திரதன், கோர யுத்தம் செய்து கொன்றான்.

அதையறிந்த அர்ச்சுனன், நாளைய போரில், சூரியன் அஸ்தமிப்பதற்கு முன், கொடிய சயத்திரதனைக் கொல்வேன் ! இயலாதேல, பெருநெருப்பில் விழ்வேன் ! என்று பிரதிக்கினை செய்தான்.

அதைக் கேள்வியுற்ற கௌரவர்கள், மறுநாள் போரில், சயத்திரதனைப் பாதல அறையுள் பதுக்கினர். அன்று இரு திறத்திலும், கோடிக் கணக்கானவர் கொல்லப் பட்டனர். மாலை மணி நான்கு.

உருமியது வானம். விறுவிறு என்று பொழுது விரைந்தது. அஸ்தமித்தான் சூரியன். எங்கும் இருள் எழுந்தது. பிரதிக்கினை தவறியது. இனி ஆயுதம் தொடேன என்றான் தனஞ்சயன்.

அவன் இட்ட கட்டளைப்படி, வானளாவி நெருப்பு வளர்ந்தது. நீராடினன். ஈரத்துணியுடன், அண்ணனை வணங்கினன் ; கண்ணனைப் பார்த்துக் கைதொழுதான். அது கண்டு தருமன் அழுதான். பீமன் குமுறினன். பாண்டவர் படை, கதறிப் பதறிக் கலங்கியது.

வாக்குத தவறியவர்கள், உலகில் வாழ்வது பாவம். அதனால், விரைந்து தீயில் விழப் போகிறேன் ! எவரும் வருந்த வேண்டா என்று, கூடிக் குமுறுவாரைக் கும்பிட்டான. தீயை வலம் வரலாயினன்.

ஐயோ என்ற அலறல். திடுக்கிட்டான். திரும்பி நோக்கினான். தாரை தாரையாய்க் கண்ணீர் ஒழுக, ஓடிவந்த கண்ணன், காண்டிபனைக் கட்டித் தழுவிக் கதறினன்.

---

மிக்கசெல்வம் உள்ளவர்க்கு, மென்மேலும் சூழ்நிலையால்,
பொக்கெனக் கோபம், பொரிந்து வரும் திண்ணமிதே.

தனஞ்சயா ! நேற்று மகனை யிழந்த சுபத்ரை, இன்று தன் மூணுளனை இழக்கப் போகிருள். அவளுக்கும், என மகளுக்கும், எப்படியடா ஆறுதல் சொல்லப் போகிறேன் ? சொன்ஞல நீ கேட்கமாட்டாய் ! பிரதிக்கினைதான உனக்குப் பெரிது ! உன் போலும் வீரர்களை, இனி உலகில் பார்க்க முடியாதே !

தேரில் ஏறு ! காண்டிபத்தை எடு ! கணைதொடு ! நாணியைக் காதளவில் இழு ! மைத்துனு ! அப்பா ! கம்பீரமான உன வீர கோலத்தை, கடைசியாக ஒருதரம், என் கண்கள் காணக் காட்டு ! அதன் பின் தீக்குளி ! என்று கதறுகிருர் கண்ணபிரான் !

ஆதி மாதவன் அலறல், விஜயன் மனத்தில் இரக்கத்தை விளைவித்தது.

மலர்முக நகை புரியும் மாமா ! அழுகையை நீர் என்றும் அறியாதவர். எனக்காகவா அழுகிறீர் ? சரி. முதலில உமது கருத்தினை நிறைவேற்றுகிறேன. அதன் பின் என் பிரதிக்கினை நிறைவேறும் என்று சொல்லிக் கொண்டே, தேரில் ஏறினன். கண்ணன் எணணப்படி காணடிபத்தை எடுத்தான. கணை தொடுததான். வில்லை வளைத்து வீராவேசம் காட்டினுன்.

உரும்...ரும்...உம் என்று விண் அதிர்ந்தது. அதிர்ச சிககுக் காரணம் ஆரம்பத்தில் தெரியவில்லை.

என்ன அதிசயம் ! பளிச்செனறு வானத்தில் வெளிசசம் எழுந்தது. இருளழிநதது. பட்டப பகலாய்ப பிரகாசித்தது பரிதி மண்டலம். கனவா நனவா காண்பது நாம் ! என்று யாவரும் அதிசயித்தனர்.

அர்ச்சுன மரணம் காண ஆவலித்திருந்த துரிய கூட்டம், அதுகண்டு அஞ்சியது. எங்கும் கலகலபபு எழுந்தது.

விஜயா ! இன்னும் சூரியன் அஸ்தமிக்கவில்லை ! தெரிகிறதா ! ஒளிந்திருந்த சயத்ரதன், நீ தீயில் வீழ்வதைக் கண்டு

---

முயற்சிக்கும் காலத்தை முன்னுணரார், பின்ஞள்
அயர்ச்சி யுடைவார், அனைத்தும்பாழ் ஆகுமரோ

களிக்க, விருப்புடன், யானை மேல் அதோ விளங்குகிறான் பார்! வீழ்த்து அவன் தலையை என்று, கோர ஆவேசம் காட்டிக் கொக்கரித்தான் கோபாலன்.

உடனே காண்டீபன் விட்டகணை, சயத்திரன் தலையை அறுத்தது. உருண்டு விண்ணில் அத்தலை, எங்கேயோ ஜபம் செய்துகொண்ட விருத்த க்ஷத்ரன மடியில் விழுந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்தான். தடம்புரண்டு நிலத்தில் வீழ்ந்தது தலை. அப்போதே அவன் தலை வெடித்தது.

என்ன செய்தி இது! என் மகன் தலையை நிலத்தில் உருள விடுபவன் எவனோ, அவன் தலை வெடிக்கட்டும் என்று, ஜெபம் செய்து கொண்டிருந்தான் பிதா. அவ்வினைக்கு இவ்வினை என்று, மாண்டு இருவரும் மண்ணாயினர். இதுவரை வரலாற்றை எவரும் அறிந்துளர். உயர்ந்த மேலோர், மற்றொரு செய்தியையும் உணர்ந்திருந்தனர்.

சூரியன் சதியுணர்ந்த கண்ணன், மாபெரும் பரிதியை மறைக்க நினைத்தான. அதை யுணர்ந்தான ஆதித்தன்.

கண்ணா! என்னை நீ சிறையிட்டால், உன் மனைவியை, மகனை, மருமகனை, சிறையிடுவன் நான் என்று சீறினன்.

தர்ம சங்கடமான சூழ்நிலைதான. வருவது வருக! மயிருக்கு மிஞ்சிய கருப்பில்லை; மச்சானுக்கு மிஞ்சிய உறவில்லை என்று நினைத்த மாதவன், எடுதது சக்கரத்தை ஏவினன். விண்ணில் விரைந்த அது, மாபெரும் சூரிய மண்டலத்தை மறைத்தது. ஆத்திரம் கொண்ட ஆதித்தன், மேற்சொன்ன திருமகட்கும், கலைமகட்கும், பிரம தேவர்க்கும், உரிய தாமரை மாளிகைகளை மூடித் தாழிட்டான்.

சூரியனுக்கு விடுதலை கிடைத்தது. வெளிப்பட்ட அவன், மாளிகையான கமலஙகளை மலரச் செய்தான் என்று, பாவலர்கள் இவ்வரலாற்றைப் பாடியுளர்.

---

எதிர்காலச் சூழ்நிலையை எண்ணா(து) இகழ்ந்தோர்
மதிக்கத் தனைககாக்கும் மாண்பழிதல் நிச்சயமே

பட்டப் பகலை, இரவு என்று பாதக சாதகம் செய்பவர் பலர். அவர்கட்கு வழி காட்டிய துரிய பரம்பரையை, கபட நாடகத்தால் அழித்தான் கண்ணபிரான். பகதனை பார்த்த னுக்குச் சாரதியான பரந்தாமன், கருணையொடு தர்மத்தைக் காக்க, பாண்டவர்க்கு உதவிய வரலாறுகளைப் பாரறியும்.

அகில உலகிற்கும் ஆககம் அளிக்க, பதது அவதாரம் செய்த பக்தவத்சலர், அருளே உருவானவர் எனபதை, கைம் மாறு கருதாத அவர் கார்மேகத் திருமேனியே காட்டுகின்றது.

' பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தர்க்கு இரதத்தைக் கட்விய பச்சைப்புயல் '

ஆன திருமால், உம்மை என்றும் ஊனறி உணர்ந்தவர்.

அண்டத்தும் பிண்டததும் உமது அருளாடல் பலப்பல. பிண்டத்தில் மும்மலம் ; காமக்குரோதம் ஆகிய களங்கங்கள். அண்டத்தில் அவைகள, அசுரப் பெருக்கமாகி ஆர்ப்பரிக்கும்.

• ஆயிரததெட்டு அணடங்களை அடக்கி, நூற்றெட்டு யுகம் வரை சூரனும், சிஙகனும், தாருகனும், அவுணருடன் உலகத் தைப் படாதபாடு படுததினர்.

அது கண்டு, சொரூப நிலையிலிருந்து உதயமாயினீர்! உத்தமர்களை வருத்தியவர்கள், வாழ்வதில்லை வையத்தில். அதை அறிவுறுத்தத் தூதுபோக்கினீர்! இணங்காத அவுணர் களை எதிர்த்தீர், அழித்தீர்.

அண்டத்தில் ஆாபபரித்த அகஙகார கண்டனம் இது. புறம் தூய்மையானுல் போதுமா? அகம் தூய்மை ஆக வேண்டாவா!

பிண்டததில் இருக்கும உயிர்கள், முருகா! குமரா! குகா என்று கூவி முறையிட்டால், ஜெபித்தால், தியானித்தால், அரிய உபதேச வழியால் ஆணவத்தை அடககி, மாயையை

---

தக்கசெயல் செய்யாமல், தான்சோம்பி நின்ருல்;
முக்கியமாம் சீர்த்தி முதலழியும் கண்டாமே

மடக்கி, கனமத்தை எரித்து ஆன்மாக்களைக் காப்பாற்றும் உம்மை, காப்புக் கடவுளான திருமால், புகழ்ந்து பாராட்டிம் போற்றுகிறார். அப் "பச்சைப்புயல் மெச்சத்தகு" பரம் பொருளே! சித்பொருளே !

சத்கரும உயிர்களை என்றும் காக்கும் அதுபோல, அடியேனையும் ஆட்கொண்டு அருளும் நாள் எனறேயோ என்று அலறியபடி.

(குறிப்பு) அருணகிரி! பாடு எம்மை என்றுன் குமார பரன்; பாடிப் பழக்கம் இல்லையே என்று, பதை பதைத்தார் முனிவர்.

முத்தைத்தரு... ..என ஓதும் முக்கட் பரமன்'

என்று, அடியெடுத்துக் கொடுத்தார் ஆறுமுகப் பரன்; அதன் பின் ஞானவாணி நாவில் நடனமிட, பாடித் தொடர்ந்து பாட்டை முடித்தார் நம் பாவாணர் என்று, வரலாறு கூறுவார் பலருளர்.

இவ்வரலாறு மெய்யாமேல், ' முத்தைத்தரு......குருபரா எனபதுவரை சிவ வாசகம்; ' என ஓதும் முக்கண் பரமன் எனபதுவரை முருகன் திருவாக்கு; பினனைய பகுதிகள் அருணை முனிவர் சிநதனைச் செய்திகள். இசெயதியின்படி, மூவர் முதலிகள் திருவாக்கு இம் முதற்பாடல் என்று, ஆழ்ந்து ஓதி இத்திருப்புகழை எவரும் அனுபவிக்கலாம் அலலவா

வாழ்க திருப்புகழ் வளம் !

ஓம்

---

அடங்காப பிடாரிகளாய் அதிகாரம் கொண்டால்,
முடங்கிக் கிடக்கவரும், முன்மதிப்பும் போய்விடுமே

# ஸ்ரீமஹாபாரதம்

(பாரத்வாஜி அதம்பார் S. ராமஸ்வாமி)

முன்னுரை*:

இதிஹாஸங்களில் பெரியது மஹாபாரதம். "முத்தமி ழுடை விஜ முற்படு கிரிதனில்" விஞயகர் வியாசர் சொல்லிவர எழுதிஞர். "பாரதம் பஞ்சமோ வேத:" என்று, ஐந்தாவது வேதமாகத் தன்னுள் எலலாவிதமான சாஸ்திரங்களையும் அடக்கிக் கொண்டது.

ராமாயணம், பாரதம் தெரியாதவர்கள் கிடையாது. ராமாயணத்தில் ஸ்ரீராமன நரஞக அவதரித்து தர்மத்தை எபபடிக் கடைப் பிடித்தார் என்பதை ஸ்ரீவால்மீகி தன காவியத்தில் வெகு அழகாகச் சித்தரிததிருக்கிருர். ஒவ்வொரு இடததிலும் பதிந்து கிடக்கும் ஆழ்ந்த தர்மக்கருத்துக்கள், 'தம்மாகூதம்' நூலில் உள. இபபொழுது தஞ்சை சரஸ்வதிமஹால புத்தக சாலையார் காண்டம் காண்டமாக வெளியிட்டு வருகின்ருர்கள். மஹாபாரதத்திற்கு அப்படி எவரும் செய்திருப்பதாகத தெரியவில்லை.

அடியேனுடைய சிற்றுரையில பர்வம் பர்வமாக வரிசைக் கிரமமாக எடுத்துக் கொண்டு, வியாசர் தர்ம ரஹஸ்யத்தையும் அதின் சூக்ஷமததையும் எப்படி வைத்துக் கையாண்டிருக்கிருர் என்பதைக் காட்டுவதே நோக்கம்.

பாரதக் கதை யாவருககும் தெரியும் என்ற அடிப்படை எண்ணத்துடன், அங்கஙகே சந்தர்ப்பங்களை ஓரிரு வாக்கியஙகளில் சொல்லி, தர்ம சூக்ஷமத்தை விளக்க எண்ணம்.

கிருஷ்ணவதாரம் பூரண அவதாரம். ராமாவதாரமோவெனில் அர்த்தாவதாரம். கிருஷ்ணனுக்குத்தான் தெய்வாம்சம் என்ற பூரண பிரக்ஞை உண்டு. ராமனுக்கப்படி இல்லை. முனி

---

பிறர்முன் தனைப்புகழின பெருநாண் கொள்வோரை,
மறவா(து) இயற்கை, வழிமுறையே வாழ்த்திடுமே

புங்கவர்களும் மற்றும் பலரும் சமய சந்தர்ப்பங்களில் ராமனின் தெய்வாம்சத்தை நினைவுபடுத்தி யுள்ளார்கள். இதை நாம் ஞாபகத்தில் வைத்தல் அவசியம்.

## 1. ஆதிபர்வம்

ஜனமேஜயனுடைய ஸர்ப்பயாகத்தில் வியாசர் வருகின்றார். மகாராஜாவின் ஆசையை நிவர்த்தி செய்ய, அவனுடைய முன்னோர்களான பாண்டவ சரித்திரத்தைச் சொல்லுகின்றார். புருவம்ச விவரத்தைச் சொல்லி, பாண்டுவின் வம்சம் ரிஷியின் சாபததினால் நசித்துப் போகுமே யென்று, குந்தி தேவிக்குத் துர்வாஸர் அனுக்ரஹித்த மந்திரங்களை உச்சரித்து முறையே கர்னர், பஞ்சபாண்டவர்கள் ஜனனமாகின்றனர். அவனன்றி ஓரணும் அசையா தன்றோ!

பாண்டவ ஜனனததைக் கேட்டு அவசரப்பட்டு தன் கர்ப்பத்தைச சிதைத்துக் கொண்ட காந்தாரி மைந்தர்கள், அக்கிரமம் செய்வார்கள். அதனால் பூபாரம் குறையவேண்டும் என்று முன்னமேயே சங்கல்பித்த வைகுண்டபதியின் ஏற்பாடே அது. முக்காலமும் தெரிந்த வ்யாசரே இம்மாதிரி மந்திரோச்சாடனத்தால் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள, (அந்தக் காலத்து வழக்கப்படி,) சாஸ்திரம் இடம் தருகிறதென்று குந்திக்கு அருள் புரிந்தார்.

நூற்றைவரும் (பாண்டவர்கள் ஐவர், துரியோதனாதிகள் நூற்றுவர்) வில்வித்தையை முதலில் முறையே குருகுல நியமப்படி கற்கிறார்கள். தக்க வயது வந்ததும் பாதிராஜ்யமும் பெற்றுப் பாண்டவர்கள் வாரணாவதத்தை ராஜதானியாகக் வசித்துவரும் சமயம், அரக்கு மாளிகையில துர்யோதனன் தீயிடுகின்றான். முன்கூட்டியே இது நடக்குமென்று அறிந்த விதுரர், வியாசர் சொன்னபடி தீயிலிருந்து தப்ப சுரங்க வழியை

பொருள் வேட்கை மிக்கான், நடுநிலையைப் போற்றல்,
ஒருநாளும் இல்லை, உலக அனுபவமே

பீமனுக்குமட்டும் சொல்லி, மிலேச்ச பாஷையில் தர்மனை எச்சரித்துப் போகின்றார்.

பின் ஹிடும்பன் வதமும், கடோத்கஜன் ஜனனமும் வருகின்றது. ஹிடும்பிக்கு வந்த த்ரிகால ஞானத்துவமும், அவள் அகஸ்மாத்தாய் அதைச் சம்பாதித்ததும், பின் பாண்டவர்களுக்கும் தங்களுக்கும் வரும் கஷ்டசுகங்களை அறிய உதவுகின்றது.

ஏகசக்ர நகரில் பகாசூரனை வதம்செய்து, திரௌபதியின் சுயம்வரம் கேட்டு, துருபத மகாராஜனின் அரண்மனைக்குச் செல்லுகினறார்கள். கர்னனும் மச்ச யந்திரத்தைச் சேதனம் செய்ய முயல்கிறன். அதை ஸ்ரீகிருஷ்ணனே தனது சக்தியால் தடுதது அர்ச்சுனனே வெற்றி காணச் செய்கிறன். காரண மில்லாமல் காரிய மில்லை யெனபதை அறிந்த பகவான செயல் இது.

திரௌபதி பின் பிறக்கிறள். அவள் குந்திதேவியின் ஆகஞைக் கிணங்க ஐவருக்கும் மனைவியாகின்றள். இது தர்மமா, சரியான முறையா என்று துருபத மகாராஜாவுக்குச் சந்தேகம் தோன்றுகின்றது, வியாசரே இதற்குப் பிரமாணங்களுடன சநதேக நிவர்த்தி செய்கினறார். மேலும் திரௌபதி நளாயினியாக இருநததும், அவர் ஐவருக்குப் பத்தினியாகக் கடவன் என்று, அவள் புருஷன் மௌத்கலயர் சபிததததும் தெளிவாகின்றன.

அரக்கு மாளிகையில் இறந்தாரென்றே கருதப்பட்ட பாண்டவர்கள், திரௌபதி ஸ்வயம்வரத்தினல் உயிருடன் இருக்கின்றார்கள எனறறிந்த திருதராஷ்டிரன், விதுரர் சொன னதைக் கேட்டு, மறுபடியும் பாதி ராஜ்யத்தைக் கொடுத்து, இந்திரப பிரஸ்தத்தைத் தலைநகராக்கி, தருமரை ராஜ்யபாரம் செய்யும்படி ஏற்பாடு செயகின்றன்.

அடுத்த சபா பர்வததில் தர்மத்தின் சூக்ஷ்மங்களைக் கவனிப்போம். (தொடரும்)

## காலதர்மமும் காலதர்மனும்

(ஆ. கி. ரங்கராஜன்)

காலம் என்பது நமது கணக்கிற்குட்பட்டதாயினும், கட்டளைக்குப் பயன்படாதது எனபது நாமறிந்த விஷயமே. எனினும் அக் காலத்தைத் தர்மதேவன் தன் வசததில் கொண்டுள்ளனன். ஆகவேதான தர்மதேவனை கால தர்மன் என அழைக்கின்றனர்கள். தர்மத்தை இயக்குபவனும் அவனே. அவனி வாழ் மாந்தர் ஒவ்வொருவரும் அனுசரிக்கும் தர்மத்தின் அளவையும், முறையையும், தரத்தையும் சீர்தூக்கி அதற்கேற்ற பலனை அளிக்கின்றனும் தர்மதேவன். தர்மதேவன் தனது நெறியினின்று சிறிதும் பிறழ்வதில்லையாம். அப்படிப் பிறழ்வானாயின், அத்தர்மமே அவனை அழித்து விடுமாம். இது. வேத நூற்களின் விரிவுரை.

தர்மம் எனபது தணலை யொத்தது. தணல் எப்படித் தன்னை அலக்ஷியப் படுத்துபவரைத் தகித்து விடுகிறதோ, அதைப் போலவே தர்மமும், தன்னை அலக்ஷியம் செய்பவரை அழித்து விடும் தன்மையது. இத்தகைய தர்மம் நமக்கெதற்கு? என்று ஐயுறலாம். தர்மம் செய்வது இன்றி யமையாதது. அதாவது, தணலைக் கொண்டு, எப்படி நாம் உணவு தயாரிககவும், விளக்கேற்றவும் உபயோகப படுத்துகிறோமோ, அதே மாதிரி தர்மத்தை இழுக்கு நேராதவண்ணம் பயன்படுத்துவது நமது கடமையாகும். தர்மம் என்பது, தீங்கனிகளையும், நிழைத்த அணைத்தினையும் தரக்கூடியதோர் விருட்சமாகும். தர்மத்தின் வழிசெல்பவர் விரும்பும் சகல சௌபாக்யங்களையும், தர்மம் அவர்கடகு அளிக்கிறது. இரக்கம் என்ற தன்மை ஊனறிய இதயததிலேதான், தர்மமாகிய தரு தழைத்தோங்கி நிற்கிறது.

---

உளத்தூய்மை இன்றேல், தவவுணர்வே ஊன்று ;
வளங்காட்டும் பேச்சும், வாயடங்கிப் போகும்மே

ஆடு மலையேறி மேய்ந்தாலும் குட்டி கோனுனுடையது தானே! அதுபோல, எவருடைய உள்ளத்தில் தர்மம் தழைத் தோங்கி வளர்ந்தாலும், அது தரும் பலன்களை எல்லாம் தர்ம தேவனே பகுத்து வழங்குகின்றுன். ஏனெனில் தர்மத்தை அவனே கட்டுப்படுததி ஆள்கின்றுன். ஆனுல், விரும்பு வோரின் கோரிக்கைகளையும், தேவைகளையும், தர்மதேவன அவ் வப்போது அளித்து விடுகிருன்.

காலம் நமக்குக் கட்டுப் பட்டதல்ல; ஆகையால நாம் தாமதியாமல், அவ்வபபோதே நமது கடமைகளைச் செய்து விட வேண்டும். ஒவ்வொரு விநாடியும் பொன போனறது. ஆதலின், ஒவ்வொரு விநாடியும் வீணுக்காமல் பயன் படுததிக் கொள்ள வேண்டும். அதாவது தர்மததில் சிநதனை, தர்மததின்படி செயல், இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் இனப வாழ்வுற, தர்மநெறியில் நிற்றல் அவசியமாகும். தாம நெறியில தவறுபவரை, தர்மதேவன தாட்சண்யமினறித தண்டிக்கிருன. ஆதலினுல் தான், புன்மதி படைத்தோர், தர்ம தேவனை தீய வனுகக் கருதுகின்றனர். தர்மதேவன், தான் வழஙகும் நீதி யிலும், செய்யும் தனது கடமையிலும் சிறிதும் தவறுவதில்லை. *தர்மத்தின் வழி செல்லாதவர்களைத்* தண்டிப்பதினுல் தான், இவனை, எமன் கொடியவன் என, இவனுக்குப் புயநதவர் கூறுகின்றனர்.

ஏமனைக் 'கூற்றுவன்' எனறும் உரைப்பர். கொடியவர் என்றும், நல்லவர் என்றும் மாந்தரின் கூட்டத்தைப் பாகுபாடு செய்து கூறிட்டு விடுவதாலும், எந்த விஷயத்திலும் அவன் கூறும் தீர்ப்பே முடிவாக இருப்பதாலுமே, அவனுக்குக் கூற்றுவன் என்ற பெயர் ஏற்பட்டது. எமனின் மேனி கரிய நிறமானது என உரைப்பர். அது சரியனறு. அவ்வாறு கூறு

---

**மண்ணுலகில் வாழ்ந்து, மதிக்கும் அறம் செய்தவர்கள்,**
**விண்ணுலக இன்ப விருந்தினர்கள் ஆவாரே.**

வுதற்குக காரணமும் உண்டு. அவனது வாசஸ்தலம், 'இருள் சேர்ந்த இன்னா உலகம்' எனறும் கூறுவர்.

எமன கொடியவரைக் கொடுமையாகத் தண்டிப்பதற்காக, அவனுக்கு அஞ்சியவர்கள் அவ்வாறு வர்ணிப்பர். அதே சமயத்தில அவன், தர்மத்தின் ஸ்வரூபனாய் விளஙகி, நல்லோர்க்கு நற்பயனகளை அளிக்கின்ருன். நல்லோர்களின முன் அவன ஜோதி வடிவனுகவும், கருணை வள்ளலாகவும் திகழ்கின்ருனும் இப்போது எமனை எவ்வாறு உரைப்பது? மிகப் பெரும் ஞானியர்களும் கூட, எமனைக் கரிய நிறம் படைத்தவன் என்று உரைக்கும் காரணம் எனன?

'அலலார்ந்த மேனியொடு குண்டுகட் பிறை எயிற்று ஆபாச வடிவமான அந்தகா!' எனருர் தாயுமானுர். 'கார்மா மிசை காலன' என்ருர் அருணகிரியார். அவரே எமனை மீண்டும் கூற்று என்றும் குறிப்பிடுகினருர்.

மானிடரின மூசசுக் கணககுப்படியே அவர்தம் ஆயுளும் முடிகிறதாம். இது அகால மரண மடையாதவர்களின் ஆயுள் கணக்காகும. முந்தைய வினைப்படி, அகால மரண மடைபவர்களின எண்ணிக்கை இக்கணக்கிற்குள் சேராது. ஆனுல் இவ்விரண்டு விஷயங்களும் எம்மானிடர்க்கும் முன்னதாகத் தெரியாது!

இனறேயோ? அடுத்தோ? நாளைக்கோ?
என்றேயோ, இச சடலம் வீழ்தல்?

ஆதலின், ஒவ்வொரு கணமும் நல்ல காரியங்களாகிய தாமச செயல்களையே புரிதல வேண்டும். நல்வினைக்கு நற்பயனும், தீவினைக்குத் தணடனையும் காலன் தவருது விதிப்பதனுலேயே, ஸ்ரீ அபிராமி பட்டர், எமனை, 'இழைக்கும் வினைவழியே அடும் காலன,' எனறு குறிப்பிடுகினருர். நற்செயல்களும் நற்பய

---

கலக விரும்பிகளால், எங்கும் கவலை;
விலக இயலா; வியன்வாழ்வு வீணுமே

னும் ஒளியின் வடிவும்; தீய செயல்களும் தீய பலன்களும் இருளின் வடிவம். அவ்வளவே!

எங்கும் நிறைந்த இறைவன் ஒருவன் போதாதா, இவ்வுலகை ஆள்வதற்கு? எனச் சிலர் ஐயுறலாம். நாடு முழுவதையும் ஆள்வதற்கு அரசன் அரசாங்கம் என்பது இருந்தாலும், ஆங்காங்குள்ள பிரஜைகளின குறைகளைத் தீர்க்கவும், குற்றங்களுக் கேற்றபடி தண்டிக்கவும், தீர்வைகளை வசூலிக்கவும் பல்வேறு உத்யோகஸ்தர்களை அரசனோ அரசாங்கமோ நியமித்திருப்பது போன்று, இறைவன் மானிடர்க்குத் தர்மத்தின் நெறிசெல்ல வழிவகுக்கும் பகுத்தறிவினைத் தந்தபின்னும், தர்மத்தின நெறி நிற்பவர்களுக்கு நன்மைகள் வழங்கவும், தவறுபவர்களைத் தண்டிக்கவும் பலவேறு உத்தியோகத்தர்களை நியமித்திருக்கின்றான். அவர்களே, நவக்கிரகர்கள், திக் பாலகர் முதலினோர் ஆவர். சூரிய சந்திரர்கள, தீ, நீர், காற்று, கூற்றுவன் என்பதெல்லாம் இவர்களுள் அடங்கும் ஒவ்வொருவராவர்.

இவ்விதிப்படி காலன் கொடியவனல்லன். அவனது கடமையைச் செய்கின்றான. நமது கடமை என்ன? தர்மத்தின நெறி நிற்றலேயாம். இக்காலத்திய சர்ச்சையான, 'எமன என்று ஒருவன் உளனா?' என்பதை ஆராய்ந்தறிய அவசியமில்லை. 'உள்ளனன்' என்றும் அஞ்சி நடுங்க வேண்டியதில்லை. தர்மநெறி தவறாமலும், இறைவனை மறவாமலும் இருந்ததாலேயே, திருநாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்!' என்று அஞ்சாமல் கூறினார். தரும நெறியில் நிற்பவராகிய

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை; இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

---

அன்பு நிறைந்த அகமுடையார், எந்நாளும்
துன்பர்க்(கு) உதவத், துறுதுறுப்பர் உண்மையிதே.

ஆசையின் வசமாகிய மனிதன், காலத்தையும் காலனையும், தர்மத்தையும் தர்மனையும் மறந்து, தன் போக்கில் செல்லத் தொடங்குகின்றான். அவன் ஆயுள் அவனறியாமல் முடியும் போது, காலதர்மனாகிய அந்தகன, அவனைச் சிறிதும் தயவே இன்றி, பற்றிச் சென்று கொடிய தண்டனைக்குள் ளாக்குகின்றான். ஆசை என்பது பெருங்கடல். அக்கடலில் அகப்பட்டவர்களுக்கு திக்குத் திசை தெரியாது. காலமாகிய காற்று, தர்மமாகிய தோணியை, அககடலில் சிக்கித் தவிப்பவன அடையமுடியா வண்ணம், அடித்து அபபால் கொண்டு சென்றுவிடும்.

காலம் தவறாது தர்மத்தைக் கடைப்பிடித் தொழுகினால், இறைவனின் கருணை அவனை நோக்கி வலியவந்து ஆட்கொள்ளுகிறது. தர்மத்தின் வழி செல்வோர்க்கு, தெய்வ பக்தி இயல்பாகவே தோன்றுகிறது. அதனால் எமபயமொழிகிறது. ஆசையில் சிக்கியவனுக்கு தெய்வபக்தி ஏற்படுவதில்லை. ஆகவே அவன் அந்தகன் வசம் அகபபடுகிறான். மககள்பால் அன்பும் இறைவன்பால் பக்தியும் கொண்டு, சித்தத்தை ஒரே நிலையில் நிறுத்தி, ஆசையின் அலைக்கு இடம்தராது, அம்பிகையின் அருளுக்குப பாத்திரரான ஸ்ரீ அபிராமி பட்டரும், மேற்கண்ட உண்மைகளை மக்களுக்கு உணர்த்தவே இறைவியைப் பின் வருமாறு பாடுகின்றார்.

ஆசைககடலில் அகப்பட்டு, அருளற்ற அந்தகன்கைப்
பாசததில் அல்லல் படஇருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன்? ஈசர் பாகத்து நேரிழையே!

---

கோள் கூறும் தீயோர், குறைக்கக் குறிப்பெடுப்பர்
தேள்போலும் அன்னாரைத் தீண்டுவதும் தீதாமே.

தேவிதாசர்கள் 34

# நாளும் கோளும்

(ரஸபதி)

சிதவாக் என்று ஒரு முனிவர். அவர் சிறந்த தவத்தைச செய்தவர். அவருடைய துணைவி பெயர் சாந்தி. கனிவு மிகுந்தாள்; கற்பின் உயர்ந்தாள்; அழகின் தேவதை என்று, பண்புள முனிவர்கள் அவளைப் பாராட்டுவர்.

புனித இத் தம்பதிகட்கு, பிள்ளை என்று ஒருவன பிறந்தான். தநயனை உவந்த தந்தை, ஜாதகம் எழுதினார். வல்லான் என்று பெயர் வைத்தார். வாய்ப்பான மகன, கழுக்கு மெழுக்கென்று இருந்தான். வளர்பிறை போல் வளர்ந்து வரும் அவனுக்கு, காலந்தோறும், முனிவர் சிறகக சம்ஸ்காரங்களைச் செய்தார்.

தவத்தில் தலையான முனிவர்க்கு, ஒருநாள் தலைநோய் வந்தது; தவியாய்த் தவித்தார். அடுத்த நாளே காய்ச்சல் ஆரம்பித்தது. வரவர அது வளாநதது. நுடஙகும் அளவு நோய்ப்பட்டு, சாந்தியும் படுத்த படுக்கை ஆயினள்.

நோயால் நொடித்த பெற்றோரை, வலலான ஒரு நாளும் நோக்கிலன. இளம் பருவம் தொடங்கி, அவன் தீயவர் நட்பில திளைத்தான். தூய ஆசாரத்தைத் துறந்தான். பாவையர் பலரைப் பலாத்கரித்தான்.

"பாவீ! உன் கொடிய செயல்கடகுத் தெய்வநதான கூலி கொடுக்கும் என்று, அகதிகளாகிய எளியவர்கள் அலறினர்.

"தெய்வமா! அப்படி ஒனறு இருக்கிறதா? அது பாமர மக்களின் படைப்பு. கடவுளாவது கத்தரிக் காயாவது

---

முயற்சியால் ஆம்துனைபைப் பொருட்படுத்தா முன்னோர் அயற்சியிலர், அந்தத்தில் ஆநந்தம் எய்தினரே.

என்று, நாவார மனமார நாலாயிரம் பேசினான். பந்துக்கள் எல்லாம் பகை ; ஊரார் விரோதமும் ஒருமித்தது.

முனிவர்க்கும், அவர் துணைவிக்கும், உடல் நோய் தீர்ந்தது ; எனினும், மகனால் எழுந்த மனநோய் வளர்ந்தது. இருவர் மனமும் கொதித்தது. ஆரம்பத்திலேயே அவனைத் திருத்த நினைத்தனர். கடுமை காட்டினர். முயற்சி எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்.

இப்படி ஒரு பிள்ளை இருப்பதைவிட, இல்லாதவர்களே புண்ணியவான்கள் என்று, எண்ணுதும் எண்ணினர்.

இவனைப் பெற்ற என்னைச் சுட்டெரிக்க வேண்டும் என்று, ஒப்பாரி வைத்தாள் உத்தம அன்னை.

நாஸ்திகப் பிள்ளையால், வமிசமே நாசமாகுமே! புண்ணியம் எல்லாம் பொசுங்கிப் போகுமே! என்று பொருமினர் முனிவர்.

கர்க்காசாரியார் என்பவர், ஒரு கடுந்துறவி. உயர்ந்த கிரகங்களை அவர் உபாசித்தவர். அவர்களது ஆதரவால், பேருன சித்தி பல பெற்றவர். கணித நிபுணர். அவரை ஒரு நாள், நம் முனிவர் அணுகினர்.

ஸ்வாமி! என் அக ஒழுக்கம் தாங்கள் அறிவீர்கள்! எட்டாம் வயதில் உபநயனம். அதன் பின் குருகுல வாசம். அங்குக் குற்றம் ஒன்றும் செய்தறியேன. கலைகள் பலவும் கற்றேன். நியதியாகப் பிரமசர்யத்தை நிறைவு செய்தேன். மதிநலம் மிக்க சாந்தியை, அதன் பின் மணந்தேன். இல்லற நல்லறம் இனிது நடந்தது. நாள்தோறும், ஐவகை வேள்வியை அழகுறப் புரிந்தேன்.

கருதத் தகுவது பிதிர்க்கடன். அது நிறைவேற, கர்ப்பா தான சிந்தனை செய்தேன். வேறு வெறிமுகமான உணர்வறியேன். தாய் மேலும் தவறில்லை ; என் மேலும் பிழையில்லை.

---

இன்பமொன்றே வேட்ட இடையருச் சிந்தனையார்,
துன்பமே கண்டார்கள், என்றுரைத்தார் தூயோரே.

இவ்வளவு இருந்தும், எங்கள் வாழ்க்கையில், ஏதமான பிள்ளை எப்படிப் பிறந்தது ? சோதிடம் வல்ல தேவரீர், இதைச் சிறிது சோதித்துச் சொல்ல வேண்டுகிறேன் என்று, வீழ்ந்து வணங்கி விண்ணப்பித்தார்.

முனிவர்களிலும் பலவகையர் உளர் ; சாதனை வகையில், ஒவ்வொரு முனிவர் ஒவ்வொரு வழியில் உயர்ந்தவர்கள்.

சோதிட நிபுணரான கர்க்கர், வல்லான் ஜாதகத்தை, அரிய பல கோணத்தில் ஆய்ந்தார்.

ரிதவாக் முனிவரே ! ரேவதி நட்சத்திரம் நான்காம் பாதத்தில், பிறந்தவன் உமது பிள்ளை. கடைசி பாதம் கண்டாந்தம் எனப்பெறும். அந்நாளில் பிறந்த அவன், அப்படித்தான் இருப்பான. அவன் போக்கைத் திருத்தி யமைக்க, உயர்ந்த வழிவகை ஒன்று உண்டு.

அவன் திருந்த வேண்டும் என்று சங்கற்பித்து, புனித துர்க்கையைத் தாய் தந்தையர் பூசிக்க வேண்டும். அத்தேவி அருளால், நாளாட்சி கோளாட்சிகள் நடுங்கும் ; ஒரு புறமாகி ஒதுங்கும்; அதன்பின், மாறி அமைவான் மகன. இதற்கு அயலாய், வேறு உய்ய வழியில்லை என்றார் கர்க்கர்.

அப்படியே செய்கிறேன் என்று, நம் அருந்தவர் திரும்பினர். இடைவழியில் நின்றார். வானத்தை நோக்கினார்.

தவநெறி யல்லால், வேறு தவறு செய்து அறியேன். ஏ ரேவதி நட்சத்திரத் தேவதையே ! எங்கள் வாழ்க்கையில் குறுக்கிட, எவ்வளவு துணிச்சல் உனக்கு இருக்கிறது ! அறிவே இல்லாத நீ, விண்ணில் மின்னுவது விரும்பத் தக்கது அல்ல ! விரிந்த இந் நிலவுலகில் வீழ்ந்து விடு ! என்று, கொதித்து சாபம் கொடுத்தார்.

அவ்வளவில், குமைந்த வானமண்டலம் குழம்பியது. நிலை குலைந்தது ரேவதி தேவதை. அங்கிருந்து, பூவுலகில் உள்ள

---

அளவிற்கு மேலுண்டி உண்டார்கள், ஆக்கை
வளமழியும், வாழ்வழியும், வாய்மையிது காணீரோ !

குமுத மலைமேல் குப்புற வீழ்ந்தது. அது கண்டபின், முனிவர் ஆறி மனம் தேறினர். புறப்பட்டார். தன் ஆஸ்ரமத்துள் புகுந்தார்.

துணைவியுடன, துர்க்காம்பிகையை, அனுதினமும் ஆராதிக்க லாயினர். சாம்பவீ! சங்கரீ! சதாட்சீ! நீ தயவு மிகுந்த தாய்! நாஙகள் உனது அடி நிழலை ஆவலிக்கும் சேய்கள்! ஏக்கமே எங்களைத் தாக்குமானல், தவநெறி வாழ்வு தூக்கம் அடையுமே! வல்லான் அறிவு வளம்பெற, தேறும் உணர்வு தெளிவடைய, அருள்க அம்பா! அருள்க தாயே! என்று தம்பதிகள் அலறினர. இப்படியே வழிபாடு, ஒரு மண்டலம் வரை வளர்ந்தது.

அதன் பயனுக, அம்மை யருள், அணு அணுவாக அணுகியது; நியதியிலான வாழ்வில், நிழலிட்டு நின்றது.

கல்லாம் மனத்து வல்லான், அதன்பின் தன் போக்கைக் கருத ஆரம்பித்தான். செய்த குற்றங்கள் யாவும், பழித்து அவனைப் பார்ததுப் பல்லிளித்தன. உணர்ந்தான். உடைந்து நெஞ்சம் உருகியது. தாய் தந்தையர் மேற்கொண்ட ககன வடிவின வழிபாட்டில, கலந்து கொண்டான். அம்பிகை திருமுகத்தை நோககினுன். அழுதான தொழுதான அலறினன. ஆராதனை இறுதியில், தந்தை தந்த தேவி பிரசாதத்தை ஏற்றுன். நெற்றியில் இட்டான். நாள்தோறும் இந்த நடை.

தீய செயலில் இறங்கிய மகன், திருந்தி வருவதைக் கண்ட, பெற்றேர் உள்ளம் களித்தது. மங்கள வடிவீ! திங்கள் வதனீ! கருணுகரீ! வரத தேவீ! உன்னை வழிபடுவார் முன, நாள்கள் கோள்கள் நாணி ஒதுங்கும். அனுபவமாக இதை அறிந்தோம்! உலகம் இதனை உணர்வதாக என்று, தம்பதிகள் இருவரும், புளகிதம் எய்திப் புகழ்ந்து போற்றினர்.

---

விளங்கிழையார் நட்பை அதிகம் விழைதல்,
களங்கம்; கருத்தழியும், காயபலம் குன்றும்மே

மக்த்தான ரேவதி விழுந்த மலை நிலம், மாபெரும் ஒளி மூமைாகி மலர்ந்தது; அதனுல் அம்மலை, ரைவதம் என்னும் பெயரை எய்தியது. என்ன வியப்பு! வளர்ந்த ஒளியி லிருந்து, அழகு மயமான ஒரு சிறுமி எழுந்தாள்.

அம்மலையில் பெருந்தவம் கிடந்த பிரமுச முனிவர், கவின் மிக்க அச்செல்வியைக் கண்டார். தன் தவசக்தியால், எதிர் கால விளைவை எண்ணினுர். மகிழ்ந்தார். எழுந்தார். விரைந் தார். குழந்தாய் ரேவதி! என்னேடு வா அம்மா! என்ருர்.

ஏதோ ஒரு சக்தியால உந்தப் பெற்று, தூய அம் முனிவ ரைச் சிறுமி தொடர்ந்தாள். ஆஸ்ரம வாழ்வு, அங்கிருந்து ஆரம்பித்தது. தந்தையும் மகளுமான பாவனையில், இருவரும் தம்தம் கடனைச் செய்தனர். தவமுனிவர் பண்பாடறிந்து, தனயை ஒழுகினள். இப்படியே உருண்டு பல ஆண்டுகள் ஓடின. பருவம் அடைந்தாள் பாவை ரேவதி.

மதிநலம் மிக்கவர், சுவாயம்பு மனு. அவர் பேரன விக்ரம சீலன். காளிந்தியை மணந்த அவன வாழ்க்கையில், துர்த் தமன் எனும் ஒரு தூயோன் தோன்றினன். சூரியகுலத் தோன்றலான துர்த்தமன், ஒருநாள் காட்டில் புகுந்தான். வேட்டை யாடினுன். மாலைநேரம் ஆயது. நகர் நோக்கித் திரும்பினன். இடைவழியில், பிரமுசர் ஆஸ்ரமம். அவரைச் சேவிக்க ஆவலித்தான். உள் புகுந்தான. இன்ப முனிவர் அங்கு இல்லை.

இருந்த ரேவதி எதிர்ப்பட்டாள். காரிகையின் கட்டழகு, கண்டதும் அவனைக் காதலிக்கச் செய்தது. எனக்கெனவே பிறந்தவளே! பிரியே! என்று, வாய் தவறி வார்த்தை பிறந்தது.

திடுக்கிட்டது மனம். என்ன தவறு செய்தேன் என்ற ஏக்கம் எழுந்தது. தலை குனிந்தான். எங்கே முனிவர்? என்ருன்.

---

மற்றவர்தம் துன்புணர்ந்து, மனமுருகும் மேலோர்கள்,
பற்றுமிக்குத் தம்உணவைப் பகுத்துண்ணல் செய்வரே.

நாணித் தலைகுனிந்த நங்கை, அக்கினிச் சாலையுள் அமர்ந்திருந்தாள் என்ற அளவு, செய்தி கூறினன். விறுவிறு என்று துர்த்தமன் அங்கு விரைந்தான். பயபக்தியுடன், முனிவர்தம், பாதம் பணிந்தான.

வா அப்பா! வா! அக்கினித்தேவர், உன் வருகையைச் சிறிது முன்தான் அறிவித்தார். ரேவதி உன் மனைவியாவள் எனறும் உணர்த்தினர். ஆதலின், என் மகளை இன்றே நீ ஏற்றுக்கொள் என்றார் பிரமுசர்.

ஸ்வாமி! கவின்மிக்க தங்கள் மகளைக் கண்டேன். பிரியே! என்று அவசரப்பட்டு அழைத்தேன. அது, தவறு அல்ல என்று இப்போது அறிகிறேன. எல்லாம் ஈஸ்வர சித்தம் என்று உணர்கிறேன் என்று, உள்ளம் உருகி உரைத்தான் துர்த்தமன.

திருமண ஏற்பாடுகள், தீவிரம் ஆயின.

அப்பா! ரேவதியன்றுதானே திருமணம் என்று, வெட்கத்தொடு மகள் வினவினள்.

அம்மா! மணநாள் கணிக்க, வேறு நட்சத்திரங்கள் இருக்கின்றன. அந்த ரேவதி மண்டலம், இன்று விண்ணில் இல்லை. அது வானில மலராதபோது, அந்நாளில் நன்மணத்தை எப்படி நடத்துவது?

அப்பா! தவமுனிவர் ஒருவர், தரையில் ரேவதியைத் தள்ளினார். தாங்களும் அவர்போல், ஒரு தவசிதானே! உலகையே படைக்கும் ஆற்றல், தவசக்திக்கு உண்டு என்கின்றார் உலகத்தார்.

---

நல்லார்கள் சார்(பு), எனறும் நயந்துகொள எண்ணுறுதார்,
கொல்லத் துணியும் கொடுமனத்தர் போல்வாரே.

தாங்கள் திருவுளம் பற்றினால், விழுந்த ரேவதி மண்டலம், விண்ணில் ஏறி விளங்காதோ ? நனமணம் அந்நாளில் நடந்த தாயின, என்போலும் இன்புறுவார் இலலே என்றாள் ரேவதி.

உடனே பிரமுசர், பிரமராம்பிகையைச சிந்தித்தார். அக முகமாகி வந்தித்தார். சூரியனது அண்மை ராசியில் இருக்க வேண்டிய ரேவதியை, தனிபபெரும் சௌரமார்க்கத்தில் தாபிக் காமல், சந்திர மார்க்கத்தில் நிறுத்த நினைத்தார். சந்திர மானத்தை அனுசரித்து, விண்ணில் அந் நட்சததிரம் விளஙகச் செய்தார். அதே நாளில், துர்த்தமனுக்கும் ரேவதிக்கும், நன் மணம் இனிது நடநதது. வாழ இருக்கும் தம்பதிகள், முனிவரை வணங்கினர். ஆசி கூறினர் அருந்தவர்.

உத்தம மக்கள் உங்கட்கு உதிக்க வேண்டுமேல், அம் பிகையை ஆராதியுங்கள் ! பகவதி மகிமையை, தேவி பாகவ தம் விரிவாகத் தெரிவிக்கின்றது. அதைச் சிறக்கப் பாரா யணம் செய்யுங்கள் ! நினைத்தவை யாவும் நிறைவேறும். பர்த்தாவிற்கு ஏற்ற பத்தினியாய், ரேவதி ! நலமுற வாழ்க்கை நடத்துவையேல், இறுதி நாளில், பழையபடி நட்சத்திர தேவதை யாகி, விண்ணில் மின்னி விளஙகுவை ! வாழ்க நீங்கள் என்று மேலும் வாழ்த்தினர்.

இணஙகி வணஙகிய தம்பதிகள், தம் ஆட்சி நகரை அணு கினர். செங்கோல் இனிது செலுத்தினர்.

ஒரு நாள் லோமச முனிவர் வந்தார். அவர் ஆதரவுடன், எத்தனையோ பிறவிகளில் எழுந்த புண்ணியம் இன்று வந்து கைகொடுக்க, வாமையை நாள்தோறும் வழிபடலாயினர்.

---

ஆளும் முறையறியா ஆட்சியரால், மக்கள்தாம்
மாளும் துயரெய்தி மாயுவதும் கண்டாமே.

நவாட்சரி மந்திரத்தால் ஓமம் எழுப்பினர். குமாரி வழிபாடு வடுக ஆராதனை யாவையும் வளர்த்தனர். தேவி பாகவதத்தைத் தினமும் ஓதினர்.

*அம்பிகை அருளால், ரேவதி கருப்பம் எய்தினள்* நாளும் கோளும் நலம்செய் நாளில், பிறந்தது ஒரு பிள்ளை. ரேவதி மகன் என்று நினைவிருக்க, அப் பிள்ளைக்கு ரைவதன் எனும் பெயரை இட்டனர்.

ரைவதன் ஆட்சிக் காலத்தில், தேவி வழிபாடு எங்கும் இனிது எழுந்தது. அதன் மூலம் துன்பமே இன்றி, எங்கும் மக்கள் இன்புற்று வாழ்ந்தனர்.

அந் நினைவு காரணமாக, இன்று நிகழும் எந்தப் புண்ணிய செயல்களிலும், ரைவத மன்வந்த்ரே என்று சங்கற்பிக்கும் செய்தி, தொடர்ந்து நடந்து வருகிறது.

ஒரு முனிவர் தவசக்தி, வித்தக ரேவதி ஆட்சியை வீழ்த்தியது. மற்றொரு முனிவர் தவசக்தி, வீழ்ந்த ரேவதியை உம்பர் சென்று தங்க உயர்த்தியது. எனவே, ஆஸ்திக நுட்பத்தை அறிந்து, தூயவராகி, வாக்கு மனம் காயத்தால் தெய்வ வழிபாடு செய்பவரை, நாளும் கோளும் நாளும் வணங்கும் என்பதை, இந்த வரலாறு கொண்டும் *அறியலாம்* அல்லவா !

வாழ்க தேவிதாஸர்கள் !

ஓம்.

---

மூத்த வயதினிலும், மோகம் *சிலர்க்குளது*;
வீத்த கலிக்கொடுமை, வேறென்ன பேசுவதே ?

# காலைக் குமரேசன்

(கி. வா. ஜகந்நாதன்)

வள்ளிபதம் பணியும் வேலைப் பணியும் தவம் தமக்குக் கிட்டியதைப் பெருவியப்புடன் பேசுகிறார் அருணகிரிநாதர். அவனைப் பலபல கோலங்களில் கண்டு வழிபடலாம். இளங் குழந்தையாகவும், பாலனாகவும், கட்டிளங் காளையாகவும், தண்டபாணியாகவும், ஒருமுகமுடைய இளங் குமரனாகவும், ஆறு முகமுடைய அண்ணலாகவும், தேவ சேனாபதியாகவும், பார்வதீ குமரனாகவும், வள்ளி மணாளனாகவும், குமரகுருபரனாகவும் கண்டு இன்புறலாம்.

இங்கே, அருணகிரியார் வள்ளி மணவாளனைக் கண்டு பணிவதைச் சொல்கிறார். பேரழகு படைத்த வள்ளிக்கு ஏற்ற கட்டிளங் காளையாக முருகன் திகழ்கிறான். ஆகவே வள்ளி நாயகன் என்ற நினைவு வரும்போது அவனுடைய அழகும் ஆண்மையும் ஒருங்கே புலனாகின்றன. மிடுக்கும் எடுப்பும் தெளிவாகின்றன. வீறும் வெற்றியும் விளங்குகின்றன.

அவனைக் காலைக் குமரேசன் எனக் கருதித் தாளைப் பணிந்தாராம்.

> காலைக் குமரே சனெனக் கருதித்
> தாளைப் பணியத் தவமெய் தியவா!

முருகனைக் காலைக் குமரேசனாகப் பணிவதனால் பயன் என்ன? வள்ளிநாயகிக்கு அந்தக் கோலம் பயன் தரலாம். நமக்கு என்ன பயன்?—இவ்வாறு எண்ண இடம் உண்டு. முருகன் செய்த திருவிளையாடல் ஒவ்வொன்றும் ஒவ்வோர் உள்ளுறை உடையது. அந்த உள்ளுறையினால், அவனைப் பணியும் அன்பர்கள் இன்ன இன்ன நலம் அடைவார்கள்

---

உட்பகை கொண்டு, உடன்சேர்ந்து வாழ்பவன்
நட்பென்றும் ஆபத்தாம் ; நட்டம் பலவுறுமே

என்ற உண்மை புலனுகும். ஆதலின் வள்ளி திருமணத்தின் உள்ளுறையை உணர்ந்தால், காளைக் குமரேசனுக வைத்துப் பணிவதனுல் உண்டாகும் பயன் தெரியவரும்.

இறைவன் வள்ளிநாயகியைத் தானே சென்று தடுத்தாண்டான. இதனுல் அவன் பெருங்கருணை வெளியாயிற்றென்பதை முன்பு பார்த்தோம். ஒருவகையில் ஆன்மாக்கள் யாவும் வள்ளிநாயகிகளே. பிரபஞ்ச மென்பது பெருங்காடு. அங்கே காமம் முதலிய பொல்லாத விலங்குகள் உழலுகின்றன. ஆணவம் என்ற யானை பிளிறுகிறது. மாயை என்ற இருள் படர்ந்திருக்கிறது. உணர்ச்சியற்ற மக்களாகிய மரங்கள் அடர்ந்துள்ளன.

இங்கே ஐம்பொறிகளாகிய வேடர்கள் உலவுகிருர்கள். அவர்களுக்குத் தலைவன மனமென்னும் நம்பிராசன. அந்த மனத்தோடு இணைந்து ஆன்மாவாகிய வள்ளி வாழ்கிறுள். ஐம்பொறிகளோடு ஒன்றி வாழ்வதே வாழ்வாக இருக்கிறுள். தினை புன்செய்த் தானியம்; அது சிற்றின்பத்தைக் குறிப்பது. அறப போகத்தைப் பாதுகாப்பதே தொழிலாக வாழ்நாளைக் கழிப்பது ஆனமா. வள்ளி புன்செய்த் தானியத்தைக் காவல் புரிவதே தொழிலாக வாழ்கிறுள்.

குருநாதன் மனிதனைப் போன்ற கோலத்தில் வருவான். அவனை இனம்கண்டு கொள்ளாமல் புறக்கணித்தால் பயன் கிடைக்காது. ஆயினும் அவன் விடமாட்டான். பல சோதனைகளைச் செய்து ஆட்கொள்வான். வள்ளிநாயகியையும் வேறு கோலம் புனைந்து வந்து சோதித்துப் பிறகு ஆட்கொண்டான் இறைவன்.

வள்ளியுடன் திருத்தணிகை மலைக்குகையில் இருந்து இனபுற்றுன் முருகன. தணிகை எனபது எல்லாம் தணிந்த இடம் என்னும் பொருளுடையது. கருவிகரணங்கள் செய

உலகின்பும், நோயுற்ருர்க் கில்லை, உணர்ந்து
கலகலப்பு நேராமுன், காப்பவரும் உள்ளனரே.

லொழிந்த மோன ஞானப் பரவெளியிலே இறைவன ஆன்மா வுடன் கலந்து இன்பமருள்வான்.

ஆதலின் முருகனைக் காளைக் குமரேசன என்று தியானம் செய்யச் செய்ய நாம் வள்ளிநாயகி ஆகிவிடுவோம். உடம்பால் ஆணுக இருநதாலும் உயிரால் பெணணுகிவிடுவோம். நான் செயதேன் என்ற அகந்தையும் மிடுக்கும் ஒழியும். நான் என்று மார்தட்டும் உரிமை நமக்கு இல்லை, அவனுக்கே உண்டு என்று தெளிவாகும்.

உயிரிலே பெண்மை வந்தால் பக்குவம் வரும். பருவம் வந்த மங்கையே மணாளனுடைய இன்பத்தைப் பெற இயலும். சீவபோதம் அடஙகுவதே உயிருக்கு மங்கைப் பருவம். அப் போது இறைவன, *"ஏக போகமாய் நீயும் நானுமாய்* இறுகும் வகை பரமசுகம் அதனை" அருள்வான.

இநத இன்பத்தை லட்சியமாக உடையவர்கள் முருகனை *வள்ளி நாயகனுக* உபாசிப்பாாகள்; காளைக் குமரேசனுகக் காதல் புரிவார்கள். அருணகிரியார் அந்த நிலையையே இந்தப் பாட்டில் சொல்கிறுர்.

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா!
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

[தலைப்பாளையை அணிநத கூந்தலையுடைய வள்ளி நாயகியின அடியைப பணியும் செவ்வேளை, தேவர்களுககுத் தலைவனுகிய மேருமலை போன்ற முருகனை, கட்டிளங காளை யாகிய குமரேசன் என்று கண்டு தியானித்துப பணிவதற்கு ஏற்ற வகையில் எனக்கு முன் செய்த தவப்பயன கிடைத்த வாறு என்னே!]

(தொடரும்)

---

அன்பிலர் தம்பால் பிணங்குவது ஆகாது :
துன்புறுத்தும் அன்னுர், தொடர்பறுதல் நல்லதரோ

## ம ண ம்

(C. M. பரமானந்தம்)

மனமாயை யேமாயை மாயை மயக்க
மனமாயை தான்மாயம் மற்றொன்று மில்லை
பிணைமாயம் வேண்டாம் பிதற்றவும் வேண்டாம்
தனையாய்ந் திருப்பத தத்துவந் தாமே.

என்றார் திருமந்திர ஆசிரியர் திருமூலர் பெருமான். மற்றும் அவரே,

சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிநதை தெளியத் தெளிய வல்லார்கட்குச்
சிந்தையி னுளளே சிவனிருந் தானே.

என்றும் கூறியுள்ளார்.

இதனையே

ஆத்மைவஹ்யாத் மனோபந்து ராத்மை வரிபுராத்மன :

(தனக்குத் தானே மிததுருவும், தானே சத்துருவும் ஆவான்) என்று கூறியுளளான் கீதாசாரியன்.

இவற்றினின றும் பெறப்படுவது யாதெனின், மனந்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்றும், மனமே நமக்கு சத்துருவும் மித்துருவும் ஆகும் என்றும், மனதையும், அதன் இயல்பையும், நன்ருக அறிந்து நம் வசப்படுத்திக் கொண்டால் யாதொரு துன்பமும் இனறி நிர்ப்பயமாக வாழலாம் என்பதே.

நானும் எனது மைத்துனரும், ஒருசமயம் ஒரு மகாத்மாவைப் பார்க்கப் போயிருந்தோம். என்மைத்துனர், தற்கால இளைஞர் பலரைப்போல், பழமைகளை, இவையெல்லாம் கேட்டுக்

நாக்குழறப் பல்கழன்று, கணமங்கும் நாளினும்,
ஆக்கைக்(கு) அழகா, அணிபுனைவா ரும்உளரே.

கேட்டுப் புளித்துப் போனவை. தற்கால ரீதியில் ஏதாவது சொல் லுங்கள்' என்பவர். இவர் சுவாமிகளைச் சில கேள்விகள் கேட்டார். சுவாமிகள் இவர்போக்கைத் தெரிந்துகொண்டு, அதற்குத் தக்கவாறு பின்வரும் விஷயங்களைச் சொனனார்.

'உலகத்தில் உள்ள பல சாஸ்திரங்கள, புராணங்கள், கலை ஞானங்கள், (ஸையன்ஸ், அரசியல்) இவை எல்லாம் எங்கிருந்து வந்தன என்பதை நீர் அறிவீரா? இவையெல் லாம் மனிதன் உள்ளத்தில் இருந்து வந்தன: இநத உள்ளம் எங்கிருக்கின்றது, எத்தனமையது என்பதை, தினம் தினம் உங்களுக்குள்ளேயே பாருஙகள். அப்பொழுது, எல்லா ஞானஙகளும் உங்களுக்குள்ளேயே புலபபடும் எனறார். அவர் பின்னும் கூறியதாவது:—ஒரு வஸ்துவைப் பார்க்க வேண்டு மானால, பார்க்கப்படும் அவ்வஸ்துவும், பார்க்கும் கண்களும் இருந்தாலும், ஒளி அவசியம். ஆனால் நாம் மனக்காட்சியிலும், கனாக் காட்சியிலும், பல பொருள்களைக் காண்கினறோம். இவ்வித காட்சிகளுக்குக் காரணமான ஒளி, நம்முள் எங்கே இருக்கின்றது என்று கண்டு ஒளிந்து கொள்ளுங்கள். அப்போது எல்லா உண்மைகளையும் உங்களுக்குளளேயே காணலாம் என்றார்.

மற்றும் 'எதைத் தெரிந்துக கொண்டால், எல்லாவற்றை யும் தெரிந்து கொள்ளலாமோ அதைத் தெரிநது கொண்டு வா' என்ற பிதாவின் கட்டளையை ஏற்றுக் கொண்டு, புத்திரன பல இடங்களிலும் சென்று, பிரம்ம வித்தையைத் தெரிநது கொண்டு வந்தான என்று உபநிஷத்து கூறுகிறது.

ஆதலால் மனம்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்றும், இந்த மனதை நன்றாக அறிந்து. அதை நம் வசப்

புதுச்செல்வம், கல்வி, புகழ்கருதி முனனேறி,
மதியாதார் தம்மிடத்து, வாய்திறப்ப(து) ஆகாதே!

படுத்தி, நல்வழிகளில் செலுத்தி, சாந்தியை நிலைநாட்டி வந்தால், அந்த மனதின் உள் சுயம்பிரகாசமான நமது யதாஸ்வரூபத்தைக் கண்டு, மெய்ஞ்ஞானம் என்கிற பிரம்ம வித்தையைப் பெறலாம் என்று தெரிகிறது.

இதனையே கீழ்ககாணும் பாடலின் கருத்தாக அமைத்துப் பாடப பெற்றுள்ளது.

## உன்னை நீயே பார்

உன்னை நீயே சற்றுப் பாரு—மனமே—உன்னிலே நீ களி கூரு
உன்னை யறியாமல் ஊருராய்ச் சுற்றியே, மன்னாதி மன்னரும்
[மலையச செய்திட்ட நீ—உன்னைநீயே

எஙகும் இருப்பதும் நீயே—எல்லாப் பொருள்களும் நீயே
தஙகிக களிப்பதும் நீயே—தயககம் அடைவதும் நீயே
—உன்னைநீயே

ஆவதழிவ துனனாலே—ஆக்கமும் கேடும் உனனாலே
சாவும் பிறபபும் உனனாலே—சராசரம் யாவும் உன்னாலே
—உன்னைநீயே

சிவனொடு விஷ்ணுவும் உன்னில்—சித்தரும் முத்தரும் உன்னில்
பவபநதம் அறுபபதும் உன்னில்-பாவஙகள் மாய்வதும் உனனில்
—உன்னைநீயே

இனபமும் துனபமும் உன்னில—ஏறறமும் தாழ்வும் உன்னில்
பொன்பொருள் போகமும் உன்னில்—பொய்யலல மெய்யிது
[சொன்னேன்—உன்னைநீயே.

---

ஈரமிகும் உளளம் இல்லாதார் நட்பகன்று,
நாரம் மிகுந்து, நலம்பெற்ற ஞாலமிதே

# இன்பமே எந்நாளும் துன்பமில்லை

(அன்பன்)

விடியற் காலம் நாலகு மணிக்கு, வைகறை என்று பெயர். கணித்த அந்நேரத்தில் கண் விழிப்பம். அப்படிப் பழக்கம் இல்லையே என்று அஞ்ச மாட்டோம். நாலைந்து நாட்கள் நாமே முயன்றால், அதன் பின் இயற்கையே நம்மை எழுப்பிவிடும்.

விழித்த பின், தெய்வமே! இதுவரை, சூனியத்தில் ஒடுங்கி யிருந்தேன். இன்றைய நாள்முழுதும், அந்தக் கரணம் தூய்மையாக இருக்க அருள! என்று நினைப்பம் கை குவிப்பம்.

அதன் பின் சிறு தூய்மை செய்வம். பிறகு தந்த சுத்தி. கைகால் முகம் கழுவி, தனியிடத்தில் அமர்வம். விபூதி தரிப்பம்.

கடையவனேனைக் கருணையினால் கலந்து
ஆண்டு கொண்ட
விடையவனே! விட்டிடுதி கண்டாய்?
விறல் வேங்கையின் தோல்
உடையவனே! மன்னும் உத்தரகோச
மங்கைக்கு அரசே!
சடையவனே! தளர்ந்தேன்! எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே!

என்று, பரனைப் பொருள் உணர்ந்து பாடுவம். நிறுத்தி நிறுத்தி, நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, பாடப் பாட, உள்ளம் உருகும்; உடலின் உறுப்புகள் யாவும், நெக்கு நெக்கு நெகிழும். இந்நிலையில், மலஜல விசர்ஜனம் தாராளமாகும்.

---

நிறையுடையார், என்றும் பொறுக்கும் நிலையர்;
நிறைவில்லார் சீறி நெடும்பகையா நின்றனரே.

மதமதப்பு அங்கிலையில் மாறிவிடும். உடல் சோர்வு யாவும் தீர்ந்துவிடும். உயிர் லேசு பெற்று ஒளிரும்.

அதன்பின், பரம அருள் வெள்ளம் இது என்று பாவித்து, பச்சைப பயறு தேய்த்து, தூய நீராடுவம். அதனபின் அனுட்டிப்பம்.

கோளறு பதிகம், சண்முக கவசம் இரண்டையும், பாராயணம் செய்வம். இறுதியில் சரண கமலாலயம் திருப் புகழைப பொருள் உணர்ந்து பாடுவம். வசதி யிருப்பவர்கள், திருமுருகாறறுப் படையும் ஓதலாம். இயலாதவர்கட்கு, மேற் சொன்ன அளவு போதும்.

இறைவற்கு நிவேதித்தவைகளை உண்பம். பிறகு உத்யோகத் துறையில், நேர்மையொடு உறவு பூண்பம்.

பகல் உணவும், பரனை நினைந்து உண்பம். மாலையில் நேரே வீட்டிற்கு வருவம். நீராடி நியதி செய்வம். அபிராமி அந்தாதியை, சிந்தித்துப் பாராயணம் செய்வம். அதன்பின் ஆலய சேவை, சிவபுராண சிரவணம். பஜனை முகம்.

இரவு வழக்கமான உணவு கொண்டபின், கைகால் அலம்பி, நீறணிந்து, படுக்கை விரித்து, சித்த சித்தியொடு இருந்து, சிவ சிவ சிவ சிவ என்று சிந்தித்து, தெய்வமே! நீயே துணை! எனறு மானசிகம் செய்து, கிழக்கோ மேற்கோ தலைவைத்துப படுப்பம்.

வீண் உறவுகளை விட்டிட்டு, நாள்தோறும் இங்ஙனம் ஒழுகும் நமக்கு, இறைவன அருளால் ஒன்றும் குறையிரா.

---

* பொருள் விளங்கவில்லை என்று எவரும் எண்ணாதபடி, இந்நூற்கள, விரிவான உரையுடன் அமிர்தவசனி காரியாலத்தில் கிடைக்கும்.

---

நட்பில்லார் முன்எதையும், நாடிப்போ தலபிழையே;
வெட்டெனவே பேசுவர், வேதனைதான் மிச்சமரோ

அமைதி பொங்கும் வாழ்க்கையில், சிறக்கத் தங்கும் சிவாநந்தம்.

ஆண்டவன் அடிமையும் உடைமையுமான நம்மை, நாளும்'கோளும் ஒன்றும் செய்யா !

இத்தகைய அனுட்டானம் ஒன்றும் இல்லாமல், தையில என்னமோ கிரக கோளாறு என்று, பலர்மனம், டக்டக், டகடக் என்று தப்புத் தாளம் போடுகிறது. நாம் அவன் அடிமை; உலகம் அவனது உடைமை. நமக்கென்று சுதந்தரம் ஏது? பஞ்சமே ஆனாலும், பாரம் அவனுக்கு என்று இருப்பம் !

ஆக்குவான், காப்பான், இளைப்பை அகற்றுவான், அருள் வான் ஆகி, தாளத்திற்கு ஓசை கொடுத்த நாயகியுடன், அபய வரத கரம் காட்டி, இதய சிற்றம்பத்தில் இருந்து, தாண்டவம் செய்கிறான் ஆண்டவன்.

"காக்கக் கடவிய நீ காவாது இருந்தக்கால், ஆர்க்குப் பரம் ? அறுமுக ! வா!! என்று ஆர்வம் கொண்டு உணர்வால் அழைப்பம். வாழப் பிறந்த நாம், இப்படி இறைபணியாற்றி இன்புறுவம்.

பஞ்சப்பாட்டை என்றும் பாடாமல், கிடைத்தவரை திருப்தி யடைந்து, பொங்கல் நாளில், அன்பு பொங்க, தெய்வ அருள் பொங்க, பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!! என்று போற்றுவம்! வாருமே பெருத்த பாருளீர்!

ஓம்.

---

உத்தமர்கள் நல்லியல்பை ஓத உயர்வு வரும்
பித்தர்களை எண்ணில், பிழையே பெருகுமரோ

# THE DECEMBER FEAST OF BHAJAN.

The joy of the sacred feet of Skanda which the devotees of Tirupughazh seek to attain to, viz. to forget the "I", and to be ever conscious of the "all", to forget fractions to live in the whole, to realise the Poorna of Ananda in the uninterrupted awareness of Muruga within and all over, was the feast that awaited us at Tiruttani in the Annual Tiruppadi Vizha of the 31st December, 1961. Devotees filling up buses carried the name of the Lord and the glory of Tiruppughazh songs all over and the pilgrims progress starting from Madras Bus stand reached Tiruttani by about 1 A. M. Bhajans and Bakthi expositions entranced the audience and the grace of the Lord of Tiruttani accompanied the train of Buses back to Madras by the early dawn of the 1st day of the English New Year. The direct movement by train of the pilgrims to Tiruttani started by the special train at the Central Station at 7-10 A.M. on the 31st December carrying a large concourse of devotees drawn from all parts of the Madras State and Ceylon and elsewhere and reached Tiruttani Station at about 10 A. M. A huge assemblage

of Bakthas there greeted the arrivals at the Station. Distinguished Officers of the Railway, the Devasthanam and other important officers and commercial dignitaries and spiritualists joined the moving mass of Bakthi. Tiruppughazh Moni, Murugadas, Kunjumani, Sangu Subramaniam and various other Bakthas in numbers too long to enumerate here, led the procession with song and recitals of Tiruppughazh to the Soora Choultry. Arrivals from out of the Station were carefully catered to and the first scene of the celebrations stopped there to lend some respite to the wearied Bakthas. Close up at 5-30 P.M. the Padi Vizha, i.e., the pilgrims march with the Sacred Tiruppughazh outpourings of Sri Arunagiri began. The pilgrims numbered easily over a lakh or a lakh and a half and perhaps were the biggest concourse ever witnessed. Tiruppughazh Moni led himself the mounting assembly (but compelled to be led on a chair contrivance), Murugadas, Kunjumani and the leaders filled the hearts and thoughts of the huge assembly in strains of most charming pieces of Tiruppughazh. One can easily say that Murugadass was perhaps the 'chief energising soul that was able to guide and lead the huge congress. The police assistance was most appreciated

and even so the scouts, At the Mandapam, Murugadass delivered the Tiruppughazh message of song aud soul for nearly two hours to more than a lakh of devotees, reaching at many points the highest altitude of God-love and God experience. With Mangalam the great festival ended. Numerous Bhajana Goshties attended and adorned the great festive Ceremonial celebration of God-love. At midnight, Tiruttani, down from the summit of the temple towers, was a blaze of effulgence—Brahma Jyothi of Upanishads. The memories of Sri Chaitanya who stayed on the Hill for some months and did Bhajan, were recalled by the songs and exposition of Sri Sangusubramaniam, the present day Krishna Chaitanya of our State.

*Thiruppugazh Mani.*

வெஃகுபவரு கிற்பதன்று, கூற்றம் நம்மேல் ;
    வெய்ய வினைப்பகையும், பைய நையும் ;
எம்பரிவு தீர்த்தோம் ; இடுக்கண் இல்லோம் ;
    எங்கெழில் என் ஞாயிறு ? எளியோம் அல்லோம் ;
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி,
    அனலாடி, ஆன் ஐந்தும் ஆட்(டு) உகந்த
செம்பவள வண்ணர், செங்குன்ற வாணர்,
    செவ்வான வண்ணர், என் சிந்தையாரே !

ASOKA

Regd. No. M. 5390 Amirthavachan... (1962 அமிர்தவசனி 13-10


# Coffee

Ours for Quality

RAW ROAST OR GROUND

**GANESH & CO., (MADRAS) LTD. MADRAS**

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்.

**சுவர்ண மாளிகை**

**A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.**

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




**குடை மார்க் பினாயில்**

(சிறந்த கிருமி நாசினி)

*தயாரிப்பாளர்:*

**ஸ்பிரிட் வேர் ஹவுஸ்**

49, சைடன் ஹாம் ரோடு

சென்னை-3. டெலிபோன்: 33982

*விநியோகஸ்தர்கள்:*

**கார் & கம்பெனி**

1/6, செகின் லேன் பீச்,

சென்னை-1. டெலிபோன்: 22058


**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து சுபகிருது வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.**

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.